We can't imagine Indian history without Gandhiji and Nehru and American Industrial revolution without Henry Ford and Andrew Carregie, Mahatma Gandhi and Nehru had in born Leadership qualities whereas Henry Ford and Andrew Carregie through experience and education became Leaders. So, truely speaking "Leaders are both born and made" Those who possess the essential of Leadership can undoubtedly develop the ability to utilise it into better advantage through experiences which give them the opportunity to Lead others.

All of us know very well that if one is to be considered as Leader, he is expected to have some extraordinary qualities, traits such as, power to take Lead and initiative, quick grasp and power of judgement, sence of responsibility, moral qualities, flexibility, intellecuial Capacity and technical competence ability to integrate and so on.

In the sphere of business also, Leadership plays a predominant role. The success of any enterprise is wholly depending upon the quality

Scanned by TapScanner

With Best Compliments From:

Phone: 2993
Resi: 2939

N. K. RAMASAMY RAJA & COMPANY,

Cotton Merchants,

RAJAPALAYAM.

Scanned by TapScanner

of its leadership. With good Leadership comes good organisation and with good organisation, successful operation. A member of examples can be cited where unsuccessful business ventures have been made successful by a change in the personal directing the enterprise and vice-versa.

Just as the political administration of the Government of India vests in the hands of the Prime Minister and his Cabinet (although the President is the constiutional head), similarly, the ultimate authority in business enterprise lies with the Board of Directors but Leadership is vested in the chief executive who may be the Managing Director or General Manager. Leadership is a dynamic process. It's important functions are i) to guide and motivate the behaviour of the subordinates and ii) to understand the feelings of the subordinaters and their problems as the plans are translated into action.

These are various types of Leadership in industry to-day. They are Intellectual Leaders: Those who with the confidence of their followers by their, superior intellect or knowledge. Institutional Leaders: Those who holds their position because of force of prestige attached to their office. Domocratic Leaders: He will act always according to the wishes of his followers.

Antocratic Leaders: He dominates and drimes his gang through coercison, commands and the insiting of fear in his followers.

Persuasive Leaders: He possesses a magnetic personality that enables him to influence his followers to join with him in getting things done.

Securing willful co-operation, using power maintaining decipline, developing high group morale, cooperation and commanding are some of the techninques to be usual by a Leader.

We, the students, in otherwords the younger generation of our society need not be remaining idle with inferiority complex. "Leadership can be cultivated through proper education and training" says chester I Bernod. We should have bear it in our mind and develop ourselves accordingly for the prosperity of our economy and nation.

Scanned by TapScanner

RAJAPALAYAM RAJUS' COLLEGE, RAJAPALAYAM.

DEPARTMENT OF PHYSICAL EDUCATION

ANNUAL REPORT 1980

B. SADASIVAM Asst. Prof. in Phy. Edn.

It gives me great pleasure to present the Annual Report of the Department of physical Education for the year 1979-'80 before this gathering.

I am glad to inform you that there are 83 boys from I Year Degree Course and 8 boys from II year Degree Course in physical Education in iv part for Co-curricular activities.

To give more practice to the players we arranged Inter Institutional Matches for the following games: Badminton, Cricket, Kabaddi, Tennikoit, Hockey etc. Most of our local Educational Institutions participated in these activities.

I am very proud to inform you that we conducted the Madurai Kamaraj University 'C' Zone Inter-Collegiate Hockey Tournament in our College for the first time on 6th and 7th February 1980, and it was the successful one. Five Colleges took part in it.

To motivate the students in games and Sports, this year we were conducting the Intramurals between outgoing and potential students. To arrange and organise this events, the following students acted as Captains.

General Captain : S. Sritharan, III B. Com.

Joint-Captains ; K. K. Subramanian, III B. Com, M. Mariappan, III B. A.

1. Cricket — S. Reghu, N. Vijayan
2. Badminton — M. S. Sidik, S. Liyakath Alighan
3. BasketBall — P. Balasubramanian, K. R. Chinnabalan
4. Hockey — P. Balasubramanian, P. Karuppiah

Scanned by TapScanner

5. Foot Ball — B. Marudhu-
pandian, K. R. Perumal

6. Tennikoit — P. Dorairaj.
P. Vasudevan

7. Volley Ball — V. Venkatasubra-
manian, P. Balakrishnan

8. Kabaddi — M. S. Asokan,
R. Ganesan

We formed a Sports Committee and in it along with Captain two of our College Staff members were included. They are Mr. R. Dhamodaran, and Mr. L. Natarajan.

Sports Committee decided to conduct the following Games and Sports for Intramurals.

Games : Badminton
Cricket
Foot Ball
Kabaddi
Volley Ball
Tennikoit

Sports : 100, 400, 1500
Long Jump, High Jump,
Hop-Step Jump
Shot-put discus, Javelin throw
Slow cycle race for Non-Teaching Staff
100mts. for Sub-staffs (peons)

As usual this year our College Basket Ball team reached finals in the 'C' Zone Inter-Collegiate Tournaments. We also participated in Badminton, Hockey, Cricket, Kabaddi. This year for the first time our College student G. Albert Kirubaharan took part in 'C' Zone chess Inter Collegiate Tournament held at Kamaraj College, Tuticorin.

I thank my College Management, Principal and my Colleagues for their full support, cooperation and guidances. I congratulate and thank our boys who have participated in Games and Sports.

Thanking you.

Scanned by TapScanner

FREEDOM FIGHTERS OF TAMILNADU

By Dr. A. Subramanian, M. A., Ph.D
Asst. Prof. In History

INTRODUCTION.

The freedom movement in India has a long and continuous history. This paper tries to account for the various stages of this struggle for freedom in Tamilnadu.

For clarity the paper is divided into three sections :

I Pre-Gandhian tendencies.

II The Gandhian movement and

III The Post-Gandhian developments.

By Pre-Gandhian we mean the developments witnessed in this region from the earliest period of recorded history to the advent of foreign colonies in India.

The Gandhian movement, as the name implies, was contemporaneous with Mahatma Gandhi and the treatment is confined to this province only. For the compilation of materials I have used lectures delivered at the Madras University during 1973-74 and a few puplished works.

The last section is devoted to estimate how far the movement started by Mahatma Gandhi has contributed to our democratic stability and cultural unification.

I. Pre-Gandhian tendencies.

Sociologists have compared India to an ethnographical museum. Some scholars feel that the variations in manners and taste between any two cultural blocks in India are as marked as those between any two major European Countries" Tamiluadu is one such block and its distinctive traits have found expression in the freedom movement also.

Even since Man appeared in the region around Madras, he had a kindling desire for freedom-that is, freedom from unforeseen climatic hazards, freedom to control the environment, and above all freedom to express what he thought and saw. Thus man has long been a "Freedom Fighter"

Coming to the proper historical period, every phase produced freedom-fighters and it was the order of the day that descendants of famous emperors became petty-chiefs under

Scanned by TapScanner

There is a marked political awareness in the country. We had illustrious leaders who always tried to improve the living and working conditions of the masses.

If statistics are a real guide, we are proud to say that in the span of 25 years of parliamentary democracy what we have achieved in this period is more than average when we compare the data with even some superpowers.

What is the prime need of the hour is to give our whole hearted co-operation to our representatives on the Government. Man is the basic unit and so the responsibility and potentiality should start from him. Our approach in Tamilnadu to every problem is characteristic of regional tint while national integration and solidarity continues to remain as the main current of social life.

With the best compliments from :

( )

S. K. S. K. M.
KARUPPIAH NADAR,
Cotton, Chillies & Commission Merchant,
RAJAPALAYAM.

Phone: 2428

Scanned by TapScanner



Physical Education Scheme



Cricket Team

Scanned by TapScanner



BASKETBALL TEAM




KABADDI TEAM

Scanned by TapScanner

Inauguration of College Athenaeum by
Thiru P. R. RAMASUBRAHMANEYA RAJHA 5-12-79



Installation of Student Chairman



A Warm Shake Vice Chairman




A thought provoking address



Student Secretary thanks



Selling an idea



Chief guest with the Office Bearers

Scanned by TapScanner

சாணக்கியரின் சதி

க. இராமகிருஷ்ணன்
M.A., B. Lib. Sc., M.A.,

நந்த வமிசத்துக் கடைசி அரசன் தனநந்தன். சாணக்கியரும் அவருடைய குலத்தினரும் நந்தர்களால் மதிக்கப்பட வில்லை. ஆகையால் சாணக்கியர் நந்த வமிசத்தை அடியோடு ஒழித்துக்கட்ட நினைக்கிறார். அதன் பினவாக சந்திர குப்த மௌரியருடன் நட்புக்கொண்டு சதி செய்கிறார். இறுதியில் சந்திரகுப்த மௌரியனால் தனநந்தன் கொல்லப்படு கிறான்.

காட்சி 1

உறுப்பினர்கள் :-

தனநந்தன் :- சாணக்கியர்.

இடம் :- தனநந்தனின் அரண்மனை.

(தனநந்தன் தனிமையில் நின்று பேசிக் கொண்டிருந்தல். அப்போது அவனுடைய முகம் கோபத்தால் புடைக் கிறது விழிகள் சிவபெருமானின் நெற்றிக் கண்போல் இடையகள் துடிதுடிக்கின்றன துடன் சியற்று காணப்படுகின்றன)

தனநந்தன் :- (தனிமையில் கோபத்துடன் பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டே) சமுதாயத்தைச் சுரண்டைபாக்கிய துரோகிகள்! மக்களின் வாழ்வைப் பாழாக்கிய மந்திரிப்புத்திர் களே! நந்தர்கள் அவர்களுக்கு நன்றி காட்டவில்லையாம்....! யார் யாருக்கு நன்றி காட்டுவது? புத்தரின் கொள்கை னைப் பரப்பும் இத்தனை மன்னர் களுக்கு நன்றி காட்டுவது? சத்தரையும் வென்று வாகை சூடும் சந்திரனை இந்தப் பாம்புகளுக்குப் பால் வார்ப்பது? காவி கட்டிக் கடவுளைக் காட்டுவதாக வேசம் செய்யும் பாவி களுக்கா இந்தத் தனநந்தன் நன்றி காட்டுவது? வேதம் ஓதிச் சாதம் தின்

னும் கரையான்களே! நந்தர்கள் நன்றி கெட்டவர்கள் எனக் கூறும் எத்தர்களே! மறந்துவிடாமல் மனதில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்—எந்த நந்தனும் ஏமாளி யாக மாட்டானென்று. சந்து பொந்து களிலே சத்தம் போட்டுத்திரியும் பித்தர் களே! நெஞ்சிலே தங்க வைத்துக் கொள்ளுங்கள் — இந்த தனநந்தன் உங்கள் தர்பாருக்குத் தலைசாய்க்க மாட்டானென்று...

(அப்போது சாணக்கியர் வரல்)

சாணக் :- தன நந்தா.....

தனநந் :- (விருட்டென்று திரும்பி) யார் என்ன பேர் சொல்லி அழைத்தது?

சாணக் :- (சிரித்துக்கொண்டே) நான் தான்...சாணக்கியன் ..

தனநந் :- (சினத்துடனேயே) வந்த சேதி....

சாணக் :- எங்கள் கடவுட் கொள்கை களைப் பரப்பக் கூடாதென்று ஆணையிட்டீராமே....

Scanned by TapScanner

தனநந் :- அதற்கென்ன இப்போது?

சாணக் :- எங்கள் சமூகத்தை தை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டுமென்று கூறினீராமே —

தனநந் :- புல்லுக்கு என்ன வேலை?

சாணக் :- எங்கள் குலத்தை வேதம் ஓதிகள் என்று இகழ்ந்து சொன்னீராமே —

தனநந் :- நல்ல வேளை — நயவஞ்சகர்கள் என்று சொல்ல மறந்து விட்டேன் !

சாணக் :- எங்கள் மதத்தில் என்ன தப்பு கண்டீர் மன்னா?

தனநந் :- என்ன தப்பு இல்லை சாணக்கியரே...

சாணக் :- எந்தத் தப்பும் இல்லை.

தனநந் :- வேள்வியில் ஆடு மாடுகளை உயிருடன் போட்டு வதைப்பது எவ்வளவு பெரிய பாவம்! எங்கள் புத்தர் கொள்கையில் அந்தத் தப்பு இல்லை! சரியான நம்பிக்கை! சரியான பேச்சு! சரியான செயல்! சரியான வாழ்க்கை! சரியான முயற்சி! சரியான விழிப்பு! சரியான தியானம்! இவைகளைப்பற்றிச் சொல்லும் எண்வழிக் கொள்கை உங்களிடத்திலே உண்டா? இல்லறத்தினருக்கு நல்லறமான பிறர் பொருளை விரும்பக் கூடாது! உயிர்களைக் கொல்லக் கூடாது! பொய் சொல்லக் கூடாது! பிறர் மனை விழையை விரும்பக் கூடாது! கள் உண்ணக் கூடாது! இந்தக் கொள்கைகள்தான் உங்களிடத்திலே உண்டா? மதத் துறவிகளுக்குப் புத்தர் பெருமான் ஆடல் பாடல்களில் பங்கு கொள்ளாதீர்கள்! ஆடம்பரப் பொருட்களை பயன்படுத்தாதீர்கள்! நேரம் தவறி உண்ணுதீர்கள்! மென்மையான படுக்கைகளில் உறங்காதீர்கள்! பணம் வைத்துக் கொள்ளாதீர்கள்! என்பன போன்ற கொள்கைகளை நீங்கள் கொஞ்சமாவது பின்பற்றுகிறீர்களா ...? இவற்றைப் போதிக்காத மதமும் ஒரு மதமா....?

சாணக் :- (கோபத்துடன்) தனநந்தா! பேசியது அதிகம்!

தனநந் :- இன்னும் பேச வேண்டியது அதிகம்!

சாணக் :- சரித்திரத்தில் உனக்கு பெயர் இருக்காது ?

தனநந் :- சதிகாரர்களின் பெயர்தான் இந்த நாட்டுச் சரித்திரத்திலே இடம் பெறுமென்றால் மக்களின் மதி அவ்வளவுதான் என்று எண்ணிவிட்டுப் போகிறேன் — பரவாயில்லை.

சாணக் .- மன்னா! பாம்புப் புற்றை உடைத்து விட்டாய்! இனி அது பதுங்கும் — ஆனால் உனக்குப் பயந்து ஓடி விடாது.

(கோபத்துடன் வெளியேறிச் செல்லல்)

Scanned by TapScanner

உறுப்பினர்கள்:- சந்திரகுப்தன், சாணக்கியர்.

இடம்:- சந்திரகுப்தனின் அரண்மனை.

சந்திர :- (உலாத்திக் கொண்டிருக்கிறான்; அப்போது அவனுக்குள்ளே பேசிக்கொள்ளல்) நந்தன் — என் தந்தை! மதிப்பிற்குரிய வம்சம்! மகதப்பெரு நாட்டிற்கே மாபெரும் வரலாற்றை தேடித் தந்த வம்சம்! அதில் வந்த மன்னன் மனத்தில் வாழ்ந்திருக்கிறான் என் தாய்! ஆனால் சிறியோர்களின் சில்லரைப் புத்திப்படி தாழ்ந்த குலத்தில் பிறந்தவளாம் அந்த அன்னை! அதனால், அந்தப்புரத்தில் இடமில்லை அவளுக்கு! அதனால், அரசாங்க மரியாதைஇல்லை அவளுக்கு! ஏழைக் குலம் என்றால் எள்ளித்திரியும் பேடிகள்! கோழைக் குலத்தினர் கொட்டிடும் கொடுஞ் சொற்கள்! கீழ் குல மகனுக்குக் கிடையாதாம் அரியணை! அறிவு கெட்டவர்கள்! அரசியல் படியாதவர்கள்? எதிர்க்கிறார்கள் அரிமாவை! சந்திரகுப்தன் சாய்ந்து விடுபவனல்ல! சுழுத்திரத்தையே கலக்குபவன்! ஓய்ந்துவிடமாட்டான் — எதிரிகள் ஒழியும் வரை! மாய்ந்துவிடமாட்டான் பகைவர்கள் அழியும் வரை!

சாணக் :- (வந்துகொண்டே) உன் வீரச் சபதத்தை விரைவில் நிறைவேற்று! எதிரிகளைப் பதறி ஓடச் செய்யும் பருவம் இது!

சந்திர :- (திடுக்கிட்டு) தீர்க்கள் சாணக்கியர்!

சாணக் :- நந்தர்களுக்கு புரோகிதன்!

சந்திர :- அவர்களுக்கு வழிகாட்டி!

சாணக் :- அரசனுக்கு அருகிலிருந்தவன்! சந்திரகுப்தா,..... எல்லாம் காலம் கடந்த கதைகள்! நடந்தவைகளுக்கு சரித்திரம் இருக்காது! இனிமேல் நடக்கப் போகிறவைகளுக்குச் சரித்திரம் உண்டு.

சந்திர :- (குழப்பத்துடன்) சாணக்கியரின் கருத்து சந்திரகுப்தனுக்கு விளங்கவில்லை.

சாணக் :- உன் தாய் இழிந்த குலத்தில் பிறந்தவள்...

சந்திர :- (மிகுந்த கோபத்துடன் வாளை உருவி) மூர்க்கனே! என் தாயை பழித்த உன் நாக்கை அறுத்துப் பருந்துக்கு விருந்து வைப்பேன்! கழுத்தைக் கொய்து கழுகுக்குக் கொடுப்பேன்! காலே வெட்டி காக்கைக்கு எறிவேன்!

சாணக் :- (பலமாகச் சிரிக்கிறார்)

Scanned by TapScanner

சந்திர :- (கோபத்துடன்) சிந்தனை யற்றவனே சிரிப்பை அடக்கு!

சாணக் :- (சிரிப்பை விடுத்து) சந்திர குப்தா! சாணக்கியனின் ஒவ்வொரு அசைவுக்கும், அர்த்தம் உண்டு! ஆகை யால் என் சிரிப்பில் அடங்கிய பொருளை நீ புரிந்துகொள்!

சந்திர :- என்ன சொல்கிறீர்கள் ?

சாணக் :- இப்போது கத்திக்கு வேலை யில்லை—புத்தியைத் தீட்டிப் புதுவேகத்துடன் செயல்படு என்கிறேன்!

சந்திர :- புத்தியோடுதான் பேசு கிறேன் — முதலில் என் தாயைப் பழித்த நாவுக்கு தண்டனை அளித்தே தீரவேண்டும்.

சாணக் :- அப்படியா! என்ன தண்டனை கொடுக்கப் போகிறாய்.

சந்திர :- நாவை நறுக்குவேன்!

சாணக் :- கொடுக்க வேண்டிய தண் டனைதான்! சந்திரகுப்தா தாமதிக்காதே! முதலில் நந்தனர்களின் நாவை நறுக்கிவிட்டு வா!

சந்திர :- (திடுக்கிட்டு) என்னையா அப்படி அழைக்கிறீர்...?

சாணக் :- உன்னைத் தவிர வேறு யாரும் இல்லையே ..

சந்திர :- இல்லை...

சாணக் :- ஆகையால் நீதான்! சந்திர குப்தா — எவ்வளவோ சொல்லிவிட்டேன் நந்தர் களுக்கு! கேட்காமல் என் னையே எதிர்க்கிறார்கள்.

சந்திர :- இந்த நாட்டுப் புரோகிதரை எதிர்க்கிறார்களா...? ஆச் சரியம்!

சாணக் :- அதுமட்டுமல்ல, நாட்டை ஆளும் உரிமை சந்திர குப்தனுக்கும் உண்டுஎன்று சொன்னேன்! அதற்கு நந்தன் கொக்கரித்தான்— தாழ்ந்த குலத்தில் வந்தவ னுக்கு தலைமைப் பதவியா? மயில் வளர்க்கும் வம்சத்தில் வந்தவனுக்கு மன்னர் பதவியா? நந்த மன்னனின் ஆசை நாயகியாக இருந்த வளின் மகனுக்கு அரசாளும் உரிமையா? என்றெல்லாம் சிந்தனையற்ற வார்த்தைகளை சிந்திவிட்டான் — அந்த மந்திக்குணம்படைத்தவன்! சந்திரகுப்தா உன்னைப் பழித்தார்கள்!! உன் இனத்தையே பழித்தார் கள்!!!

சந்திர :- (கடுஞ்சினத்துடன்) வீணர் கள்! விரட்டப்பட வேண்டிய வர்கள்! யாரையார் இகழ்வது

தப்பித்துக்கொள்ள நினைக் கிறீரா . ?

சாணக் :- தர்மத்தேவன் வரலாற்றில் தலைமறைவுக்கே இடமில்லை! மகத மன்னா...!

Scanned by TapScanner

சந்திர :- எதைப்பற்றி...?

சாணக் :- நமக்குள் ஏற்படப்போகும் ஒப்பந்தத்தைப்பற்றி..!

சந்திர :- சொல்லுங்கள்...

சாணக் :- தனை நந்தகின ஒழித்துக் கட்டுவதில் என்னுடைய முழு ஒத்துழைப்பும் உனக்கு உண்டு! அவனுக்கு பிறகு, ஆடும் மயில் குலத்தவன் என்று குறை வாகப் பேசப்பட்ட உன்னை அரியணையில் ஏற்றுவேன்! பார்புகழும்படி உனக்கு பெருமைகளை உன்னாடாக்கு வேன்! அதற்கு நீ எனக்கு என்ன கைமாறு செய்வாய்?

சந்திர :- நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் எதிர் பார்க்கிறீர்கள் ?

சாணக் :- புரோகிதர் பதவி எனக்கே கொடுக்கப்பட வேண்டும்!

சந்திர :- இன்னும் உண்டா...?

சாணக் :- நானும் எனது குலமும் இந்த நாட்டில் அழியாத சக்தியாக விளங்க வேண்டும்...

சந்திர :- அப்படியென்றால்...?

சாணக் :- எங்கள் மதத்துக்கு உன்னுடைய அரசாங்கம் மதிப்புக் கொடுக்க வேண்டும்! புத்த மதத்திற்கு அல்ல!

சந்திர :- இவ்வளவுதானே ...

சாணக் :- இதற்கு மேல் தேவையில்லை!

சந்திரகுப்தா சண்டைக்கு பயந்தவனல்ல! நந்தர்களின! நன்றி கெட்டவர்களின! தோல்வியில் குலத்தான் வெற்றி வாகை சூடப் போவது — வெகுசீக்கிரம்! என் தாயைப் பழித்த கயவனை — உன் நாக்கை நறுக்குவேன் ? புலியிடம் பூனை முறைப்பதா! நரியிடம் நன்று விளையாடு வதா? சிங்கத்திடம் கன்று விளையாடுவதா? நந்தா! முந்தா நாள் முடி சூடிய வனே! அரியணையில் அமர்ந்து அதிக நாள் ஆக வில்லை அதற்குள்ளே ஆணவமா? அதற்குள்ளே அகம்பாவமா? அதற்குள்ளே அற்பத்தனமா? கோழைகள்! வாளோடு பேசத் தெரியாதவர்கள்! தோளோடு மோதத் தெரியாதவர்கள்! உங்களின ஒழித்துக்கட்டும்வரை - என் உள்ளம் உறங்காது! என் உணர்ச்சிகள் உறங்காது!

சாணக் :- அந்தச் சபதத்தையே நானும் எடுத்து வந்திருக்கிறேன் சந்திரகுப்தா! நந்தனை அழிக்கும்வரை — என் உணர்ச்சிகள் உறங்காது!

சந்திர :- சாணக்கியரே! நாம் இருவரும் இதில் சரிபாதியாக இருக்கிறோம்!

சாணக் :- உண்மை! அதே நேரத்தில் ஒன்றை பேசிக்கொள்ள வேண்டும்...

Scanned by TapScanner

சந்திர :- எந்த மதம் எப்படியிருந்தாலும் அதைப்பற்றி கவலைப்படுபவன் நானல்ல! எனக்குத் தேவை வேதம் அல்ல! வேந்தன் என்ற பட்டம்!

சாணக் :- இந்த உறுதி போதும்! சந்திரகுப்தா! இன்னும் ஒரு மாதத்திற்குள் தனநந்தன் கொல்லப்படுவான்! நாம் இருவரும் சேர்ந்தே இந்தக் கொலையைச் செய்யப் போகிறோம்! அரசனாக நீயும் அரசகுருவாக, நானும் மகத நாட்டு அரசாங்கத்தில் அமரப் போகிறோம்! சம்மதந்தானே!

சந்திர :- சந்தேகமில்லை.

(சில நாட்களுக்கு பிறகு)

சாணக் :- தன நந்தன் — மகதத்தின் மகா சக்ரவர்த்தி! (பலத்த சிரிப்பு) புத்த மதத்தின் புத்துயிர்! (பலத்த சிரிப்பு) நந்தர்களின் நந்தாவிளக்கு! அணைந்துவிட்டது! சூது வென்றது! சூழ்ச்சி கொன்றது மூட நந்தர்களின் பயணம் முடிந்துவிட்டது! சாணக்கியன் சாதிக்காதது-அவன் சரித்திரத்திலேயே கிடையாது! வேதம் எங்களுக்கு நாதம்! சோறுபோடும் சொர்க்கம்! பசியைப் போக்கும் பால் பசு! அதைக் கொல்லத் துணிந்த உன்னைப் பல்லிலப் பிடுங்கி, பதவியையும் பறித்து, உன்னையும் ஒழித்துவிட்டேன் பார்த்தாயா?

சந்திர :- (வந்துகொண்டே பெருமிதத்துடன்) சாணக்கியரே..

சாணக் :- வரவேண்டும் மன்னா!

சந்திர :- உலகத்துக்கு காட்டிவிட்டோம் – வாய்ப்பந்தல் போட்டவர்கள் வாழமுடியாது என்பதை!

சாணக் :- (சிரித்துக்கொண்டே) வாய் வீரமெல்லாம் மெய்வீரமல்ல! பொய் வீரம்! சூதுக்கு இருக்கும் வீரம் வாதுக்கு இருப்பதில்லை! வேந்தே! அந்த நந்தன் சொன்னான்— புல்லேந்திகளெல்லாம் வில்லேந்திகளல்ல என்று! (இகழ்ச்சியுடன்) பாவம்! தனநந்தனுக்குத் தெரியாமல் போய்விட்டது — புல் வெல்லுமா? வில் வெல்லுமா என்று?

சந்திர :- கோட்டையை விடுத்துச் சென்றவர்களைப்பற்றி வேண்டாம் — கவலை! கோட்டையை எடுத்துக் கொண்டவர்களுக்கு வந்துவிட்டதே கவலை!

சாணக் :- எதற்காக?

சந்திர :- ஆளுவதில் சிக்கல்! முறையான நெறிவிளக்கம் தேவை!

சாணக் :- அதற்குத்தான் இருக்கிறதே அர்த்த சாஸ்திரம்—

Scanned by TapScanner

சந்திர :- அப்படியென்றால் ....?

சாணக் :- வீட்டை ஆளுவதற்கு ஒரு மகனை! நாட்டை ஆளுவதற்கு ஒரு அர்த்தசாஸ்திரம்! குடிமக்களின் மகிழ்ச்சியில் தான் மன்னனின் மகிழ்ச்சி! குடிமக்களின் நலனில்தான் மன்னனின் நலம்! இதுதான் அர்த்த சாஸ்திரம்!

சந்திர :- (ஆச்சரியத்துடன்) சூழ்ச்சி செய்யத் தெரிந்தவர்களுக்கு சூத்திரம் செய்யத் தெரியுமா?

சாணக் :- சாணக்கியன் எழுதினால் தான் அர்த்த சாஸ்திரமா .?

சந்திர :- (தெரியாமல்) அர்த்த சாஸ்திரம் உங்களுடைய ஆக்கம் இல்லையா?

சாணக் :- இல்லை. எழுதியவன் — ஒருவன்! அவன் பெயர் இருக்கோதா — திரை! எழுதுகோல் நான்! என் மூலம் இருக்கும் திரை!

சந்திர :- என்ன இது!

சாணக் :- இதுதான் சூழ்ச்சி! (மறைந்த சிரிப்பு) இதுதான் சாணக்கிய தந்திரம் (மேலும் சிரித்தல்) இதுதான் சரித்திரம் — அர்த்த சாஸ்திரத்தை எழுதியவன் வன் கௌடில்யன்! இதுதான் யதார்த்தம் — அர்த்த சாஸ்திரத்தை எழுதியவன் சாணக்கியன்!

சந்திர :- சாணக்கியரே! பொறாமை கூடாது!

சாணக் :- அதில்தான் பெருமையே இருக்கிறது.

(திரை)

WITH BEST COMPLIMENTS FROM :

PHONE : 2944

S. S. RAMASUBRAMANIA RAJA & CO.,

COTTON MERCHANTS.

RAJAPALAYAM - 626 117.

S. INDIA.

Scanned by TapScanner

WITH BEST COMPLIMENTS FROM :

STOCKIST FOR :

'NIVIA' Rubber Basket Balls, Leather Basket Ball, Volley Balls & Foot Balls, Pioneer Hanuman & Narayan Badminton Rackets.

SPECIAL TOURNAMENTS FOR :

Tennikoit, Badminton & Volley Ball

KUMAR SUPPLIES :

QUALITY SPORTS GOODS AT REASONABLE PRICE

PLEASE CONTACT :

KUMAR SPORTS EMPORIUM

120, JEYALAKSHMI VILAS,

K. R. NAGAR (P. O.) RAJAPALAYAM

★★★

With best compliments of

Phone : 2771

BHARATH PAPER STORES

RAJAPALAYAM

Dealers in :
PAPER & OFFICE STATIONERY

Manufacturers of :
Account Note Book, Envelope, Exercise School Note Book
in Controlled paper

Distributors For :
KORES Carbon paper, Type Ribbon
Stencil, Duplicating Ink.
Art Materials, Printing Ink.

★★

With the Best Compliments From :

Phone No. 2838

Sri Ananda Rama Krishna Hardwares

Dealers in : Hardware, Paint,
G. I. Pipes & Cements.

Stockists : ICI Dulux Paints,
Shalimar Paints & Super Snowcem
Cement Paints

824, Tenkasi Road,

RAJAPALAYAM-626117.

Scanned by TapScanner

WITH BEST COMPLIMENTS FROM :

N. R. KRISHNAMURTHY & Co.,

Cotton Merchants.

1063, COTTON MARKET,

RAJAPALAYAM-626 117.

TEL : YENARKAYAM

Phone { Off : 2882
Res : 2272

WITH BEST COMPLIMENTS FROM :

RAJHA GINNING FACTORY,

5, Kammalar Madam Road,

COTTON MERCHANTS,

RAJAPALAYAM - 626 117.

Phone: 2332.

Scanned by TapScanner

Phone No. 2373

RAJESWARI ELECTRICALS,

716, TENKASI ROAD,

RAJAPALAYAM - 626 117.

Dependable House of Everything in Electricals

AUTHORISED DEALERS IN

- ○ Crompton Lamps & Fittings
- ★ Bajaj Lamps & Fittings
- ○ Ralli Table & Ceiling Fans
- ★ Orient Table & Ceiling Fans
- ○ Cool Home Table & Ceiling Fans
- ★ Khaitan Ceiling Fans
- ○ Finolex Cables

DEALERS :


Philips Lamps and Fittings
HMT Lamps
Bijili Lamps
Lumina Lamps
LT LK Switchgears
Bosma Switchgears
Underground Cable All Sizes
Essen Electrical Control Accessories.

Prop. T. R. Alaga Raja

Scanned by TapScanner

Chief Guest Thiru. A. SUBBA RAJA (Ex-Chairman)
Republic Day Celebrations





Hoisting the Flag


Secretary Welcomes




A Peroration

Scanned by TapScanner


College Athenaeum




Chairman
A. Ramakrishnan III B. Com.



Vice-Chairman
Chandrasekaran III B. A.



Secretary
A. Mathivanan II B. Com.



Joint Secretary
K. Chandrakumar II B. A.

Scanned by TapScanner

Office Bearers



I B. A. Representative
M. P. Karuppiah



I B. Sc. Representative
Arumachalam



Chemistry Association
Boge



History Association
Jayachitra III B. A.

Scanned by TapScanner

Madurai Kamaraj University N. A. E. P. Project Officer Thiru S. RAJU, M. A., Visit our Centres 19-3-'80



A Warm Welcome



P. O's Projections





P. O. with Student animators

Scanned by TapScanner

மாதவியின் கானற் பாணி

ச. பாலசுப்பிரமணியன் III பி.ஏ.,

மாடலன் பகன்றது :

மாதவியின் கானற்பாடல் கனக விசயர் என்ற ஆரிய மன்னருடைய முடித்தலையை நெரித்தது என்பதை மாடலன்

"வாழ்க எங்கோ! மாதவி மடந்தை கானற் பாணி கனக விசயர் தம் முடித்தலை நெரித்தது ;

என்று ஒரு நாள் சேரன்செங்குட்டுவனிடம் சொல்லிக் கொண்டிருந்தான் உண்மையில், சேரன் செங்குட்டுவன் தான் கனகன் விசயன் ஆகிய இருவரை அடக்கி அவர் முடித்தலையில் கண்ணகிக்குச் சிலை எடுப்பதற்குரிய கல்லினை ஏற்றிக் கொண்டு வந்தவன். எனினும், அவன் முன்னிலையில் மாடலன் என்ற மறைவன் இவ்வாறு ஒரு நாள் கூறியது செங்குட்டுவனுக்கு வியப்பாகவே இருந்தது,

"இதுவரையில் இவ்வாறுகூற நான் கேட்டதில்லை. நீர் வந்து இவ்வாறு கூறிய தன்காரணம் என்ன?" என்று மாடலனை நோக்கி மன்னவன் கூற, அதற்கு மாடலன் கீழ்க்கண்ட விளக்கத்தை உரைக்கலுற்றான்.

மாடலன் மொழிப் பொருள் :

"மூன்பு ஒரு நாள் இந்திர விழா நாளிலே கடல் விளையாட்டிற்காகக் கோவலனும் மாதவியும் சென்றிருந்த பொழுது மாதவி பாடியதொரு பாட்டால் கோவலன் அவளை விட்டுப் பிரிந்து, கூடாது வீடு திரும்பினன். அவ்வூடலுக்குக் காரணம் ஊழ்வினை போலும்! மாதவியைப் பிரிந்து தன் குலக்கொடி கண்ணகியொடுமதுரைக்குச் சென்றவன் கொல்லப்பட்டான். அவ்வாறு கொல்லப்பட்ட கோவலனுடைய மனைவி

குடவர் கோவே நின்னுடு புகுந்து வடதிசை மன்னர் மணிமுடி யேறினள்,"

என்ற கருத்துப்பட மாடலன் மொழிந்தான்.

இவ்வாறு அவன் கூறியதை உற்று நோக்கினால் காப்பியத்தின் உட்பொருளாக மதிக்கப்படும் மூன்றனுள் ஒன்றுகிய ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்பது இங்கு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்பது அறிய வரும், மாதவியோடு ஊடல் ஏற்பட்ட காலத்தில் "ஊழ்வினை யாழிசை வடிவில் வந்து தோன்றிக் கோவலனைப் பிரிய வைத்தது என்பதைக் கவிஞர் குறிப்பாக உணர்த்தியுள்ளார்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் :

சிலப்பதிகாரத்தை இளங்கோ வடிகள் இயற்றுவதற்குக் காரணமாக இருந்த மற்றொரு நோக்கம் "அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாக நின்று கொல்லும்" என்பதை மாடலன் மறையவனுல் இவ்விடத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

"இலைத்தார் வேந்தன் எழில்வான் எய்த" கோவலன் கொல்லப்பட்டான் என மாடலன் கூறிய பொழுது,

Scanned by TapScanner

கோவலனைக் கள்வன் என்று கருதிக் கொல்வித்த அரசன் தன் பிழையை உணர்ந்து, கோவலன் கள்வனல்லன் என்பதைக் குறிப்பிட்டு, "நானே தவறு டையேன்" என்று ஒப்புக் கொண்டு மடிந்தமையால் அவன் சிறப்பு இங்கு எடுத்துச்சொல்லப்பட்டுள்ளது. அவ்வேந் தன் இக் காரணத்தால் விண்ணுலகு அடைந்தான் என்பதை "எழில் வான் எய்த" என்ற பகுதி விளக்கும்.

தலைவர்கள் ழுவர் :

சிலப்பதிகாரக் காப்பியத்தில் வந் துள்ள தலைவர்கள் மூவர். இக் காப்பியம் கண்ணகியினுடைய மாண்பினையும், பாண்டியனுடைய செங்கோன்மையினை யும், செங்குட்டுவனுடைய வீரத்தாலும் உயர்ந்து நின்றது. கோவலன் பிரிந்து சென்ற பிற்பாடு மாதவி அவனுக்கு இரண்டு முறை கடிதங்கள் அனுப்பினள். ஒரு முறை தன் தோழி வயந்த மாலை வழியாகவும், மறுமுறை கௌசிகன் என் பான் வழியாகவும் அனுப்பினள், என்றும் சிலப்பதிகாரம் செப்புகிறது. அவள் அனுப்பிய இரண்டாவது கடிதத்தில்,

"ஞரவர் பணியன்றியுங் குலப்பிறப் பாட்டியொடு
இரவிடைக் கழிதற் கென் பிழைப் பறியாது
கையற நெஞ்சங் கடியல்வேண்டும்"

என்று சொற்கனை அமைத்து எழுதியிருந் தான். அங்கு கண்ணகியைப் பற்றி வரும் "குலப்பிறப்பாட்டி" என்ற சொற் ருெடரையும் மாடலன்கூறிய 'குலக்கொடி' என்ற சொல்லையும் ஒப்பவைத்து நோக்கி னல் இலக்கியநயம் தோன்றுமல் இருக்காது.

கருத்துச் செறிவான வழி :

மாதவி பாடிய கானற்பாணியைக் கேட்டகோவலன் அவளை விட்டுப்பிரிந்து, குலக்கொடி கண்ணகியோடு மதுரை சென்ருன். அவன் மதுரை செல்லவில்லை என்ருல், அவன் கொல்லப்பட்டிருக்க மாட்டான். கொல்லப்படவில்லை யென் ருல், கண்ணகி மதுரையை அழித்துச் சேர நாட்டிற் காலெடுத்து வைக்கப் போவதில்லை. அவள் அங்குச் செல்ல வில்லை யென்ருல் அவனுக்காகக் கோயில் எடுக்க செங்குட்டுவன் எண்ணியிருக்க மாட்டான். கோயில் அமைக்க அவன் கருதவில்லை யென்ருல், கண்ணகி சிலைக் காக அவன் வட இமயம் சென்றிருக்க மாட்டான்.

வடதிசை செல்லவில்லை எனின், கனகவிசயர் தம் தலைகள் நெரியப் போவ தில்லை. மாதவி ஊடியது போலப் பாட வில்லை யென்ருல் கதையே வேறு வித மாக முடிந்திருக்கும். கண்ணகிக்குச் சிலையெடுக்க வேண்டிய நிலையே ஒரு 'வேனா ஏற்படாமற் போயிருக்கும். இக் கருத்துக்களைச் செறித்தமைத்து இளங்கோவடிகள் மாடலன் வழியாக

"மாதவி மடந்தை கானற்பாணி
கனக விசயர் தம் முடித்தலை
நெரித்தது"

என்றவாறு விளம்பியுள்ளார். சிலப்பதி காரக் காப்பியப் பெருமைக்கு மாதவியின் கானற்பாணி எவ்வளவு உறுதுணையாக உள்ளது என்பது இதனுல் அறியப்படும்.

மிகச் சிறந்த நண்பர்களைத் தேர்ந்தெடு. அடுத்த முக்கிய கடமை, மிகச் சிறந்த புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பது ஆகும்.

- சார்லஸ் கேலப் கார்டன்

Scanned by TapScanner

WITH THE BEST COMPLIMENTS FROM

PHONE : Office. 2321
Res. 2835

SRI THIRUPATHY BALAJI & CO.

COTTON MERCHANTS.
RAJAPALAYAM.

SRI BALAJI COTTON COMPANY,

COTTON MERCHANTS,
Cotton Market,
RAJAPALAYAM.

SRI PADMAVATHI COTTON TRADERS,

9, Kamalar Madam Road,
RAJAPALAYAM.

Scanned by TapScanner

WITH THE BEST COMPLIMENTS FROM

M/S. N. A. PAPPU RAJASONS,
Cotton Merchants,
RAJAPALAYAM.

M/S. N. A. PAPPU RAJA SONS,
Ginning Factory,
RAJAPALAYAM.

M/S. N. A. P. TEXTILES,
Waste Cotton Spinning Mills,
RAJAPALAYAM.

M/S. N. A. P. SYNDICATE,
Cotton Merchants,
RAJAPALAYAM.

M/S. SREE DEVI ENTERPRENEUR,
Cotton, Waste Cotton Merchants,
RAJAPALAYAM.

M/S. N. A. P. CORPORATIONS,
Waste Cotton Merchants,
RAJAPALAYAM.

Scanned by TapScanner

Grams : BLISS

Telex : MA 294 -
RAJA IN

Phones : 2481
2985

Rajapalayam Mills Limited,

Samusigapuram Road, Post Box No. 1,
RAJAPALAIYAM.
(PIN. 626 117)

(A modern spinning Mills with 36,044 Spindles)

Manufacturers of

COMBED, CARDED, SINGLE & DOUBLE YARN
IN HANKS AND CONES

COUNTS : 20s To 100s

STAPLE FIBRE YARN IN HANKS AND CONES

COUNTS : 30s To 40s

— * —

Founder : Sri P. A. C. RAMASAMY RAJA
Chairman : Sri P. R. RAMASUBRAHMANEYA RAJHA, B.Sc.,

Scanned by TapScanner

நல்லதுக்கு காலமில்லை

அ. செல்வராஜ் III பி. காம்.

தமிழ் பேராசிரியர் தணிகாசலம் ஒரு தனியார் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணியாற்றுபவர். அவர் வகுப்புகளில் பாடங்களை குறித்து விரிவுரை ஆற்றுவதுடன் மற்றும் நின்று விடாமல் மாணவர்களுக்கு பல நல்ல அறிவுரைகளை அவர்கள் மனதில் பதியும் வண்ணம் எடுத்தியம்பும் ஆற்றல் உடையவர். இதனால் இவரிடம் மாணவர்கள் ஒரு தனி மரியாதை காட்டினர்கள்.

சில மாணவர்களின் விடைத் தாள்களை திருத்தி பல்கலை கழகத்துக்கு மதிப் பெண்களை அனுப்பவேண்டி இருந்ததால் அன்று ஞாயிற்றுக் கிழமையாக இருந்தாலும் கல்லூரிக்கு பேராசிரியர் வந்திருந்தார். பேராசிரியரைக் கண்ட கல்லூரிச் சேவகன் ஓடிச் சென்று பேராசிரியர்கள் தங்கும் அறையை திறந்து வைத்தான். விடைத் தாள்களை எடுத்து ஒவ்வொன்றாக திருத்த ஆரம்பித்தார் பேராசிரியர். சிறிது நேரம் கழித்து கல்லூரிச் சேவகன் அவரிடம் வந்து "ஐயா உங்களை சந்திக்க ஒருவர் வந்திருக்கிறார்" என்று அறிவித்தான். பேராசிரியர் அந்த நபரை உள்ளே வரச் சொல்லும்படி சேவகனிடம் கூறினர்.

பேராசிரியரைக் கண்டு பேச வந்தவர் கல்லூரி நிர்வாகத்தினருக்கு மிகவும் வேண்டியவர். வாட்ட சாட்டமாக இருந்தார். பட்டு வேஷ்டியும் சில்க் ஜிப்பாவும் அவருடைய செல்வத்தைப் பறைசாற்றியது. வந்தவரை வணக்கத்துடன் வரவேற்ற பேராசிரியர் அருகிலுள்ள இருக்கையில் அமரும் படி வேண்டினர். வந்தவர் தன்பெயர் தனபால் என்றும் அவருடைய மகன் சேது கல்லூரியில் இளங்கலை இறுதியாண்டு தமிழ் இலக்கியம் படிக்கிறான் என்று கூறினர். சேது ஆசிரியர்களிடம் மிகவும் மரியாதையுடனும் பண்புடனும் நடந்து கொள்வான், ஆனால் வகுப்பில் கடைநிலை மாணவனாகத் திகழ்ந்தான்.

சேதுவின் அப்பா பேராசிரியரிடம் "என் மகன் இந்த ஆரும் பருவத்தில் கல்லூரி நடத்திய தேர்வுகளில் தமிழ் இலக்கியத்தில் தவறி விட்டான்" எனக் கூறினர். இப்போது பேராசிரியர் தனபாலின் வருகையின் நோக்கத்தை அறிந்து கொண்டார். பேராசிரியர் சேதுவின் அப்பாவிடம் "கல்லூரி நடத்தும் தேர்வுகளிலே உங்கள் மகன் தேற முடியவில்லையே இனி பல்கலைக் கழகம் நடத்தும் தேர்வுகளில் எவ்வாறு வெற்றி பெற இயலும்" எனக் கேட்டார். அதற்கு சேதுவின் அப்பா ஒரு குறுக்கு வழியைச் சொன்னார் சரி, அவ்வாறு தேர்வு பெற்ற சேதுவினால் என்னபயன்" எனக் கேட்டார் அதற்கு சேதுவின் அப்பா அவனை மேற் கல்வி பயில அனுப்பப் போகிறேன் எனக் கூறினர். பேராசிரியருக்கோ இப்படிப்பட்ட பெற்றோர்கள் இருக்கும் வரை நாடும் உருப்படாது அவர்களுடைய பிள்ளைகளும் உருப்பட மாட்டார்கள் எனத் தெரிந்து கொண்டு மன வேதனை அடைந்தார்.

பின்பு சிறிது நேரம் கழித்து சேதுவின் அப்பாவிடம் "ஐயா நான் விடைத் தாள்களை திருத்தும் போது மாணவனின்

Scanned by TapScanner

பெயரைப் பார்த்ததும் அவன் எப்படி எழுதி இருக்கிறான் அதற்கு தகுந்த மாதிரி மதிப்பெண்கள் போடுகிறோம். இப்போது நடந்துக் கொண்டிருக்கும் விடைத்தாள்களில் கூட எந்த விடைத்தாள் உங்கள் மகனுடையது என்பதைக் கூட நான் அறியேன். இவ்வாறு இருக்கும் போது எப்படி உங்கள் மகனுக்கு அதிக மதிப்பெண்கள் போட முடியும்? எனப் பேராசிரியர் மறுத்துக் கூறினர். சந்தோசத்தை ஒரு மாதிரியாய் ஆகி விட்டது தன்னுடைய பண பலத்திற்கு மதிப்பில்லாது கண்டு மிகவும் வெட்கினர். "எப்படியோ கொஞ்சம் அனுசரித்துப் போடுங்கள்" என்று கெஞ்சினர். இதைக் கேட்டதும் பேராசிரியர் சிறிது நேரம் மவுனமாக இருந்துவிட்டு "ஒன்று செய்வீர்களா?" என்று சேதுவின் அப்பா-விடம் கேட்டார் தனபாலுக்கோ ஒரே மகிழ்ச்சி பேராசிரியர் தன் வழிக்கு வந்து விட்டார் என்று "ஒன்று என்ன ஒன்பது கேட்டாலும் செய்யத்தயார்" எனவாக்கு கொடுத்தார். பின்பு பேராசிரியர் தனபாலை நோக்கி "உங்களைப்போன்றவர்கள் நேரேபல்கலைகழகத்திற்குச் செல்லுங்கள் கல்லூரி நடத்தும் தேர்வுகளில்மாணவர்கள் தேர்ச்சி பெறத் தேவையில்லை, பல்கலைகழகம் நடத்தும் தேர்வுகளில் மட்டும் மாணவர்கள் தேர்ச்சி பெற்றால் போதும், என்று சட்டத்தை மாற்றச் சொல்லுங்கள்" என்று பேராசிரியர் கூறினர்.

இதை கேட்டதும் தனபாலுக்கு மிகுந்த அவமானமும் கோபமும் ஏற்பட்டது. ஆனால் அவற்றை வெளிக்காட்டிக் கொள்ளாமல் 'நீங்கள் என் மகனை தேர்வில் தேர்ச்சி பெற வைக்காவிட்டால் நான் கல்லூரி முதல்வரை சந்திக்க வேண்டியது வரும்' என்று கூறினர். 'அப்படியே செய்யுங்கள்' என்று பேராசிரியர் கூறினர். 'முதல்வரை சந்தித்த பிறகு நான் கல்லூரி நிர்வாகத்தினரையும் சந்திக்க வேண்டியது வரும்' என்று சிறிது கோபத்துடன் கூறினர். தனபால் கல்லூரி நிர்வாகத்தினரைச் சந்தித்தால் தனபாலின் பணபலத்தால் தன் வேலை பறி போகக் கூட சந்தர்ப்பம் இருப்பதை உணர்ந்தும் பேராசிரியர் "அப்படியே செய்யுங்கள் பிக்க மகிழ்ச்சி" எனக் கூறினர் இதற்கு மேலும் அவமானப்பட விரும்பாத சேதுவின் அப்பா வருகிறேன் என்று கோபமாக கூறிவிட்டு வேகமாக வெளியேறினர்.

அன்று மாலை ஐந்து மணிக்கெல்லாம் முதல்வர் அவர்கள் பேராசிரியரைச் சந்திக்க அவர் இல்லத்திற்கே வந்து விட்டார். முதல்வரும் பேராசிரியரும் நெருங்கிய நண்பர்கள். முதல்வர் பேராசிரியரிடம் "போனில் போகிறது அந்த சேதுவுக்கு சிறிது மதிப்பெண்களை அனுசரித்து போடுங்கள். இதன் நிமித்தம் நம் வேலை பறிபோனால் நம்-முடைய குடும்பத்தின் நிலையையும்பார்க்க வேண்டாமா?" என்று அறிவுறுத்தினர். பேராசிரியரோ தவறு செய்வதற்கு மறுத்து விட்டார். உலகத்தில் பண பலம் உள்ளவர்கள் குறுக்கு வழியில் முன்னேறும் பொழுது அவர்களுக்கு அடிபணிய மறுக்கும் நல்ல மனிதர்கள் நிலைமையை எண்ணி முதல்வர் மன வேதனை அடைந்தார். பின்பு முதல்வர் விடைபெறும் போது அவருடைய கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

தனபால் தன்னுடைய பெயரால் பள்ளிக்கு அருகிலே மாணவர்களுக்கு விடுதி ஒன்றைக் கட்டித் தருவதாக

Scanned by TapScanner

கல்லூரி நிர்வாகத்தினருக்கு வாக்கு கொடுத்தார். இந்த தந்திர சூழ்ச்சி யினால் பேராசிரியரின் வேலைக்கு உலை வைத்தார் அந்த பெரிய மனிதர்.

இதையறிந்த பேராசிரியர் அருகில் இருந்த நகரத்திலுள்ள ஒரு கல்லூரியில் வேலைக்கு முயற்சி செய்தார். பேராசிரி யருக்கு வேலையும் கிடைத்து விட்டது. கோடை கால விடுமுறையில் தன் குடும்பத்தை அந்த நகரத்திற்கு மாற்ற வேண்டி ஏற்பாடுகளை செய்தார். அவர் அந்த ஊரை விட்டு கிளம்பும் போது மாணவர்கள் பலரும் விடை கொடுக்க வந்திருந்தனர். அவர்களில் சேதும் ஒருவன். தந்தை செய்த குற்றத்திற் காக மகன் மன்னிப்புக் கேட்டான். பேராசிரியருக்கோ சேதுவின் நல்ல எண்ணத்தை கண்டு ஆனந்தக் கண்ணீர் வந்தது. மாணவர்கள் மிகுந்த அன்புடன் வழி அனுப்பினர்கள். பேரா சிரியர் பதவியை விட்டு விலகினாலும் மாணவர்கள் காட்டிய அன்பு பேராசிரி யரின் மனத்தை நெகிழச் செய்தது.

முதல்வரும் சக ஆசிரியர்களும் பேராசிரியரை வழி அனுப்ப புகைவண்டி நிலையத்திற்கு வந்தனர். முதல்வர் விடை கொடுக்கும் போது அவர் கண்களில் நீர் திரையிட்டது.

★

Wiih the best compliments from:

SARAVANA TRADERS,

Cotton Waste Merchants,

Cotton Market,

RAJAPALAYAM.

Phone No. 2628

★

Scanned by TapScanner

மகாத்மாவின் சிந்தனையில் மாணவர்கள் - II

1. மாணவர்கள் தாமே முன்வந்து காரியங்கள் செய்வதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். அவர்கள் தாமே சிந்தித்துப் பார்க்கவும், செயலாற்றவும் தகுதி கட்டுப்பாடும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். அதே சமயத்தில் மூற்றிலும் கீழ்ப்படிதலும், நடந்துகொள்வதை நிறுத்திவிடவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு சுதந்திரம் அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பணிவும், கட்டுப்பாடும் இருந்தாக வேண்டும். கட்டுப்பாடின்றி விருப்பப்படி நடப்பது மட்டரகத்தின் அறிகுறியாகும்; அது தனக்கும் அருகிலிருப்பவர்களுக்கும் கேடு விளைவிக்கக் கூடியதாகும்.

2. படிக்கும்போதே சேவை செய்வதற்கு ஒரு மாணவனுக்கு வாய்ப்பு கிடைத்தால், படிப்பை நிறுத்தி வைப்பதாக அதைக் கருதாமல் படிப்புக்கு அனுசரணையான ஒரு அரிய சந்தர்ப்பம் என்றே கருதவேண்டும்.

3. மாணவர்கள் முதலில் கற்றுக் கொள்ளவேண்டியது பணிவே ஆகும். அது இல்லாமல் அவர்கள் தமது படிப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ள முடியாது. அவர்கள் பெரிய பட்டங்களைப் பெறலாம்; பதவிகள் பெறலாம். ஆனால், அவர்கள் தங்களுடைய அறிவை மனிதர்களுக்குச் சேவை செய்ய பயன்படுத்திக்கொள்ள விரும்பினால், பணிவு மிகவும் அவசியமாகும்

4. மாணவர்கள் போக்கிரிகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுவிடக் கூடாது போக்கிரி களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை அவர்கள் பெறவேண்டும்.

5. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதை தீங்கை விளைவிக்கக் கூடியது. மாணவர்கள் வேலை நிறுத்தம் என்பது அதைவிட மோசமானது. அந்த வேலை நிறுத்தம் நியாயமானதாக இருந்தாலும், அநியாயமானதாக இருந்தாலும் அதனால் தீங்குதான்.

6. நீங்கள்தான் எதிர்காலத்தின் நம்பிக்கை. நீங்கள் கல்லூரிகளிலிருந்தும், பள்ளி களிலிருந்தும் வெளியே வந்த பிறகு, இந்நாட்டிலுள்ள ஏழைகளுக்குத் தலைமை தாங்கி நடத்துவதற்காக பொதுவாழ்வுக்கு அழைக்கப்படுவீர்கள். ஆகையால், மாணவர்களாகிய நீங்கள் உங்கள் பொறுப்பை உணர்ந்து அதை இன்னும் உருவான விதத்தில் காட்டவேண்டுமென்று விரும்புகிறேன்.

Scanned by TapScanner

With Best Compliments From :

SRIRAM PRODUCTS
SRIRAM CHEMICAL COMPLEX
SRIRAM GELKEM INDS. P. LTD
GITANJALI MILLS LTD
PUSHPANJALI INDS. P. LTD

Chairman :

P. K. RAMASAMY RAJA

(Srirams Group of Industries)

Grams : SRIRAMS

Phone : Off : 2443, 2669, 2665, 2269

Res : 2870 & 2491

Registered Office :

36, SRIRAM NAGAR,

P. B. No. 29,

RAJAPALAYAM-626 117.

S. INDIA

Scanned by TapScanner

சங்க இலக்கியத்தில் மகளிர்

வே. பொன்னுசாமி | பி.ஏ ,

இலக்கியத்தை ஒரு வகையில் உயிர்ச்சித்திரம் என்று சொல்லலாம். எனினில் தான் தோன்றிய காலத்தின் வாழ்க்கையும், இலட்சியத்தையும் அது பிரதிபலிக்கின்றது. சங்கம் இருந்து தமிழ் வளர்த்த காலமாதலால் சங்க காலம் என்று பெயர்பெற்றது. அக்காலத்தில் தோன்றிய தொல்காப்பியமும், ஏனைய சங்க இலக்கியங்களும் சங்ககாலச் சமுதாய நிலையில் மகளிரின் நிலைபற்றி நமக்கு எடுத்துக்காட்டும் ஒரு காலக் கண்ணாடியாகத் திகழ்கின்றன. அதனால் அவை சமுதாயநிலைகள் அத்தனையையும் காட்டின என்றுகூற முடியாது. இன்னது, இனியது நல்லதெனப் புலவர் நாட்டப்பெற்ற வாழ்க்கை மரபுகளை மட்டும் காட்டுகின்றது.

தலைவன், தலைவி, தோழி போன்ற பாத்திரங்களின் இலக்கியப் பாடல்களில் இருந்தும், களவு, கற்பு, திணை என்ற மூக்கநிலைகள் வரையறுக்கப்பட்ட இலக்கிய அமைப்புகளில் இருந்தும் சங்க மகளிரின் வாழ்வு எத்தகையது என ஊகிக்கலாமே தவிர அவ்வாறே இருந்தது என அறுதியிட முடியாது.

ஆண்பாலார் அடைந்த நிலையைக் காட்டிலும், பெண்பாலார் பெற்ற நிலை தாழ்ந்திருந்தது; என்பது இவ்விலக்கிய மரபின் தரும சான்றாகும். தற்போது சனநாயக ஆட்சி உரிமை பெற்றுள்ள மகளிர் சங்க காலத்தில் அவ்வுரிமைகளை இழந்த நிலையில் இருந்தனர். அவ்வுரிமை இழந்தமைக்கு சமுதாய நிலை அறிஞர்கள் பல்வேறு காரணங்களைக் கூறுகின்றனர். முதலாவதாக பெண்களின் மென்மையான உள்ளமும், உடலமைப்பும் ஒரு காரணமாகக் கருதப்படுகின்றது. இரண்டாவதாக அவர்களின் கற்புக் கொள்கையும் ஒரு காரணமாகக் கருதப்படுகின்றது.

கற்புக் கொள்கை சங்க மகளிரின் உயிர்க் கொள்கையாகக் கருதப்பட்டது. "உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" — தொல் III என்று தொல்காப்பியர் கற்பினைப்பற்றிக் கூறுகின்றார். மேலும் புறத்திணையும், நற்றிணையும் கற்புகளைப்பற்றி (அ) நன்றி சான்ற கற்பு (ஆ) மூல்கி சான்ற கற்பு (இ) கடவுள் கற்பு என்று கூறுகின்றன.

கற்பென்றால் பெண் என்று நினைக்கத்தக்க அளவுக்கு சங்க காலத்து மகளிர் நிலை இருந்தது. அந்நிலையை சார்ந்து அவர்கள் மூன்று கோணங்களில் நோக்கப்படுகின்றனர். (அ) திருமணத்திற்கு முந்தியநிலை (ஆ) திருமணத்திற்கு பிந்தியநிலை (இ) கணவனை இழந்தநிலை.

திருமணத்திற்கு முந்தியநிலை:-

சங்க காலம் இயற்கைவளம் மிகுந்த காலமாக இருந்ததால் பெண்கள் பூநாடியும், புனல் நாடியும் சென்றனர். பெற்றோர்களுக்குத் துணையாக அவர்கள் சில மென்மையான தொழில்களில் பங்கு கொண்டனர். சான்றாக முல்லை நிலத்துப் பெண்ணாக இருந்தால் பால், தயிர் விற்றல் போன்ற செயல்களிலும், குறிஞ்சி நிலத்துப் பெண்ணாக இருந்தால்

Scanned by TapScanner

MADRAS CHIPBOARDS LTD.,

"SRI BHAVANAM"
1089 / W-20, P. S. K. Nagar,
RAJAPALAYAM.

Phone : { Office : 2931
Factory : 2876

Gram : CHIPBOARDS

Manufacturers of :

'LAKSHMI' BRAND

Chipboards and Special Veneered Chipboards

Ideal for :

Partitions, False Ceiling Furniture Making etc.,

Madras Sales Office :

MADRAS CHIPBOARDS LIMITED,

Chordia Mansion, Ist Floor,
150-A, Mount Road, Madras-2.
(Phone : 88640 & 83443)

SRI N. R. KRISHNAMA RAJA,
Cotton Merchants,
Rajapalayam.

Scanned by TapScanner

இணைப்புனம் காத்தல் போன்ற தொழிலி லும் சங்க கால மகளிர் ஈடுபட்டனர். அப்படிப்பட்ட வேலைகளில் ஆடவர் கனைக் காண்கின்றனர். சில வேளைகளில் காதல் வலைகளிலும் விழுகின்றனர் அக் காதலை வெளிப்படையாகக் கூற தயங்கி தங்கள் தோழிகள் வாயிலாக தாய், தந்தையரிடம் கூறச் செய்தனர்.

திருமணத்திற்கு பிந்திய நிலை:-

திருமணம் ஆனபின் பெண்கள் தங்கள் கணவனின் இல்லத்திலேயே வாழ்ந்தனர். பொதுவாக தன் குடும்பம் வறுமையுற்ற காலத்தில் தந்தை கொடுத் தனுப்பிய பொருளைக்கூட வாங்க மறுத்து விடுகிறாள் என்ற குறிப்பை நற்றினை மூலம் அறியலாம்.

"கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக் கொடுத்து தந்தை கொழும் சோறு உள்ளான்" —நற் 100.

இப்பாடலில் இருந்து சங்ககாலப் பெண் தன் கணவனின் வறுமை நிலையை வெளிப்படுத்தாமல் அவனது மானத்தை மேம்படுத்துவதிலேயே குறிக்கோளாக இருந்தாள் என்பதையும் அறியலாம்.

சங்ககால மகளிர் தன் கணவனுக்கு அருஞ்சுவை உணவு படைத்து அவனை மகிழ்விப்பதுதான் தனக்கு பெருமை என்று எண்ணினாள் என்பதை குறுந் தொகை காட்டுகிறது.

"ஞாளிதயிர் பிசைந்த காந்தள் மெல் விரல் ... .
இனிதெனக் கணவன் உண்டனின் நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே,'
—குறுந் 167.

குழந்தை செல்வம் இல்லற வாழ்வின் முக்கிய பயனாகக் கருதப் பட்டதை கீழ்வரும் பாடலால் அறியலாம்.

"மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லை தாம் வாழு நாளே"
—புறம் 264

கணவனை இழந்தநிலை:-

பெண்கள் மஞ்சள் குங்குமத்துடன் இறப்பதைப் பெருமையாகக் கருதினர். கணவனை இழந்த பெண்கள் பெரிதும் கணவனுடன் உயிர் துறத்தலையே விரும்பினர். கணவனுக்குப்பின் அவர்கள் ஆற்றவேண்டிய கடமை இருப்பின அக்கடமைக்காக உயிர் வாழ்ந்தனர். அவ்வாறு வாழும்போது கைம்மை நோன்பு இருந்தனர். ஒருத்திக்கு ஒருவன் என்ற இலக்கியம் முழுமையாக பின்பற்றப்பட்டது.

உழைப்பு என்பது தெய்வ வழிபாட்டுக்குச் சமம்
சிரிப்பே வாழ்க்கையின் ஜீவன்.
—வல்லபாய்படேல்

பலாத்காரம் எப்போதும் அடிமைத்தனத்தினை வளர்க்கும்.
—மொரோஸ்

Scanned by TapScanner

குடி, குடியைக் கெடுக்கும்

ரா. எஸ். இராமச்சந்திரன் | பி.ஏ.,

நாட்டில், குறிப்பாக எளிமையான குடும்பங்களில் பலர் குடியால், தனது மனைவி, மக்களை நடுத்தெருவில் பிச்சை எடுக்க வைத்துவிடுகிறார்கள். பல கணவர்கள் தனது மனைவிகளை தவிக்க விட்டுவிடுகிறார்கள் இதன் அடிப்படையில் எழுதப்பெற்றதுதான் இச்சிறுகதை.

என் கண்ணில் கடல் அலைபோன்று பொங்கி எழுந்த கண்ணீர் துளிகள் என் கையில் சொட்டு சொட்டாக விழுந்தது. திடுக்கிட்டு எழுந்தேன். அப்போது இரவு 10 மணி என நகராட்சியின் சங்கு ஒலித்துக்கொண்டு இருப்பதை எனது காது கூர்மையாகக் கேட்டது அப் போதும்கூட பானையில் அரிசி வேக வில்லை என்பது நினைவுக்கு வரவில்லை. எனது கண்கள் நாலாபுறமும் பாய்ந்த போது, பாவம் எனது இளைய மகன் கோபி, ஒரு சுவர் ஓரத்தில் கால்களை முடக்கிக்கொண்டு படுத்திருந்தான். மேலும் என் கண்ணில் ஒளி அடுப்பை நெருங்கியபோது, அடுப்பில் பூனை படுத் திருந்தது. இதைக் கண்டதும் மூத்து, மூத்தாக கண்ணீர் சிந்துவதைவிட வேறு வழியில்லாமல் போய்விட்டது. "எவ்வளவு சீரும் சிறப்புமாக வாழ்ந்த என் குடும்பம், என் கணவருக்குப்பின் சீர்குலைந்து போய்விட்டது பெரியவன் என செல்லமாக வளர்க்கப்பட்டதால் ரவி, தீய நண்பர்களுடன் சேர்ந்து குடி பழக்கத்தைக் கற்றுகொண்டான், ஒரே ஒரு பெண் என வளர்க்கப்பட்ட சுசிலா, படித்து பட்டம் பெற்றுவிட்டு, கல்லூரி மாணவிகளிடம் சேர்ந்து பொது சேவை செய்கிறாள். ஆனால் ஒன்றும் அறியாத கோபி மட்டும் துன்பம் அடைகிறான்." என்று நினைத்த என் இதயம், ஏழை களின் சொத்து கவலையும், கண்ணீரும் தான் என்பதையும் நினைவூட்ட தவற வில்லை. இவ்வாறாக எனது இதய இசை சுழலும்போது, கோபி அம்மா பசிக்கிறது சாப்பாடு கொடு என்று சொன்னதும், அணையைத் திறந்துவிட்டால் தண்ணீர் ஓடுவதுபோல, மேலும் என் கண்ணில் கண்ணீர் சிந்துவதை அடக்க முடிய வில்லை, அடக்காமல் இருக்கவும் முடிய வில்லை, காரணம் அந்த நேரம், சுசிலா வரும் நேரமாக அமைந்துவிட்டமையால் அப்போது தெருவில் செல்லுபவர்களில் பலர், பரவாயில்லை, எளிமையான குடும் பத்தில் பிறந்த பெண்ணை இருந்த போதிலும் பல நல்ல கருத்துகளைச் சொன்னாள் என்றும், நாட்டில் இப்படி ஒவ்வொரு குடும்பத்திலும், ஒருத்தி இருந்தால் எவனும். குடிக்கமாட்டான் என்றும் சிலர் சொல்வதைக் கேட்டதும்

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" வள்ளுவர் கூறியதுபோல் மகிழ்ச்சி அடைந்தேன்.

"இரவுக்குப்பின் பகல் உண்டு. இன்பத்திற்குபின் துன்பம் உண்டு" என்பதை சுட்டிக்காட்டும் விதத்தில் "அம்மா, அம்மா கதவைத்திற விரைவாக திறம்மா, போலீஸ் என்னை பிடிக்க வருகிறது" என்று ரவி கத்துவதைக் கேட்டதும் "சூரியன் மறைவில்

Scanned by TapScanner

WITH BEST COMPLIMENTS FROM

HARAN STUDIO,

TENKASI ROAD.

PALAKKAD.

Scanned by TapScanner

With the best compliments of :

MADRAS CEMENTS LTD
RAMCO BRAND
PORTLAND CEMENT

MADRAS CEMENTS LTD.,

Manufacturers of famous

RAMCO CEMENT

Regd. Office :
'Ramamandiram',
RAJAPALAYAM.

Factory :
RAMASAMYRAJA NAGAR-626 204
TULUKKAPATTI,
(Via) Virudhunagar.

Scanned by TapScanner

கீழ்வானத்தில் செல்ல, சந்திரன் உதயம் ஆவதைப் போன்று'' மகிழ்ச்சி, மறைந்து ''புயலுடன் மழையும் பொழிவதைப் போன்று'' மனக்கொதிப்புகளிடையே கண்ணீர் ஆருக ஓடியது அதன் பின்பு ரவியை போலீஸ் பிடித்து சென்று விட்டதையும் எனக்கு ஏற்பட்ட மயக்கம் இபோதுதான் தெரிந்துவிட்டது என் பதையும் அறியும்போது ''அம்மா, அம்மா''.

என்று குயில் போன்று சுசிலா இசை எழுப்பியதும், எனது கைகள் தாழ்பாவை திறந்தது சுசிலா, தான் ஒரு பட்டதாரி என்பதைக் காட்டும் விதத்தில் அடக்கத்துடன் வீட்டிற்குள் நுழைந்து கட்டிலில் அமர்ந்தபோது பக்கத்து வீட்டில் கடிகாரம் தனது கடமையை சரியாகச் செய்வதை உணர்த்தும் வகையில் 12 முறை டாண், டாண் என ஒலி எழுப்பியதால் எதுவும் பேசாமல் படுத்துவிட்டோம். சூரியன் தனது பணியைத் தொடர்ந்ததைக் கண்டதும் எழுந்தேன், சுசிலா எனக்கு முன்பே எழுந்துவிட்டதையும் அறிந்தேன். கோபி எழுந்து, அமர்ந்து கால்களிடையே தலையைச் சாய்த்து இருப்பதையும் கண்டேன். முந்திய நாள் நிகழ்ச்சியை எண்ணி வருந்தினேன், வாடினேன். இன்று என்ன செய்வது என்று திகைத்தேன், திண்டாடினேன். அதே சமயத்தில் சுசிலா, ''அம்மா இந்தா பணம் என்ற சொல்லோடு, நான் நேற்று மதுகுடி ஒழிப்பு பிரச்சாரம் செய்தமைக்கு எனக்கு கிடைத்த பணம் என்று வார்த்தைகளை அடுக்கிக்கொண்டு இருந்தபோது, திரும்பினேன் பணத்தை வாங்கினேன். மகிழ்ச்சியில் மூழ்கினேன் கோபியை அழைத்தேன், அவன் கண்ணீரைத் துடைத்தேன்-துன்பத்தை நீக்கினேன், அரிசி வாங்கிவர செய்தேன் சமைத்தேன் - நிம்மதியாக மக்களோடு உண்டேன். ஆனால்!''

எனது கண்கள் மட்டும் மேலும் கண்ணீர் சிந்தியதை நிறுத்தவில்லை; இது ஆனந்தக் கண்ணீரா இல்லை, மகனுக்காக தாய் வடிக்கும் துன்பக் கண்ணீர், துயரக் கண்ணீர். என் வயிற்றில் பிறந்த குழந்தை கொள்ளைக் காரனாக, கொலைக்காரனாக, குடிகாரனாக இருந்தாலும் தாய் உள்ளம் மகனை மறக்குமா? இந்நிகழ்ச்சிகளுக்கிடையே, பையன்களோடு கோபி பள்ளி சென்றான் சுசிலாவும் வழக்கம்போல தனது பணியைத் தொடரச் சென்றுவிட்டாள் இவ்வாறாக சுமார் ஆறு மாத காலம் உருண்டு ஓடியது

ரவியும் சிறையிலிருந்து வந்து இரண்டு, மூன்று நாட்கள் சென்று விட்டது. அரசாங்கத்தின் மத ஒழிப்பு சட்டத்தின்கீழ் எங்கள் கிராமத்திற்கு போலீஸ் அதிகாரியாக சசி என்பவரும் வந்தார் அவருக்கு வரவேற்பு கொடுக்கும் விதத்திலும் பொங்கல் விழா கொண்டாடும் விதத்திலும் மைதானத்தில் பெரிய பந்தல் ஒன்று போடப்பட்டிருந்தது. இவ்விழாவில் என் மகளும் பேசுவதால், மற்ற பெண்களோடு நானும் சென்றேன். ஊரில் பெரிய பேச்சாளர் என்ற முறையிலும்-நற்பணி மன்றத்தின் செயலர் என்ற முறையிலும் சோனை என்பவர் பேசிக்கொண்டு இருந்தார் அவர்.

ஓங்குக காந்தியின் புகழ், வளர்க நற்பணி மன்றம். மதிப்பிற்குரிய பெரியோர்களே; என்று துவங்கி மக்களை திசை திருப்பும் வகையில் உள்ள அவர் பேச்சை முடித்தார். அடுத்தபடியாக எனது மகள் பேச ஆரம்பித்தாள். தித்திக்கும் செந்தமிழ் பேச்சாளர்

Scanned by TapScanner

With best compliments from :

BOOKS LAND

(Publishers and Booksellers)

Mudangiar Road,

RAJAPALAYAM.

We are dealing with books and Notes for:-

★ Colleges, Schools and Polytechnics

★ TNPSC Exams

★ UPSC Exams

★ Banking Services Exams

★ Shorthand Exams

★ General Reading

Step in and Step out

with treasure of Knowledge!

Scanned by TapScanner

"விதைத்தவனுக்குத் தெரியும்"

எம். கே. சேகர். I பி.காம்.

அது ஓர் அமைதியான கல்லூரி. கல்லூரி தான் அமைதியாக இருந்ததே ஒழிய அங்குள்ள மாணவர்கள் அமைதியாக இல்லை. அவர்கள் தங்கள் கோரிக்கைகளை முன் வைத்துக் கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தார்கள். எங்கு திரும்பினாலும் "மாணவர் உரிமையைக் காக்க" என்ற வாசகங்கள் கல்லூரி யூனியன் தலைவன் குணசேகரன், தனக்குரிய பெருமிதத்துடன், மாணவர்களுடன் நின்று கொண்டிருந்தான்.

மாணவர்களின் கோபமும், கோஷமும் எந்தவித பலனையும் தரவில்லை, அவர்களுடைய கோபம் நேராக P.R.C. பஸ்களின் மீது தாவியது. குணசேகரன் தன் சக மாணவர்களுடன் கற்களை பஸ்களின் மீது எறிந்து கொண்டிருந்தான். பஸ்களும் சேதம் அடைந்தன. ஒரு பாவமும் அறியாத பொதுமக்கள் கண்டக்டர், டிரைவரும் காயம் அடைந்தனர். பலரது பழிச் சொல்லுக்கு ஆளானான் குணசேகரன். கடந்தது.

குணசேகரன் தன்னுடைய படிப்பை முடித்தவுடன் வேலை ஒன்றில் உடனே சேர்ந்து விட்டான். வீட்டில் அவனுக்கு "கல்கட்டும்" போட்டு விட்டார்கள். மறுநாள் நண்பன் ஒருவன் வீட்டிற்குச் செல்ல ஆயத்தமானான். தன் புது மனைவியுடன் பஸ்ஸில் பிரயாணம் செய்கையில் பஸ் திடீரென்று நின்றது. நின்ற இடம் ஒரு கல்லூரியின் முன்னால். மாணர்கள் கூட்டம் கூட்டமாகக் கோஷங்களை எழுப்பிய வண்ணம் இருந்தனர். முடிவில் கற்கள் சரமாரியாக பஸ்ஸின் மீது விழத் தொடங்கின. அநேகம் பேர் காயமுற்றனர். குணசேகரனுக்குக் காயம் சற்று அதிகமாக இருக்கவே அவன் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப் பட்டான்.

மருத்துவ மனைக்கு வெளியில் அனைவரும் புலம்பிய வண்ணம் இருந்தனர். தாலிகட்டிய நேரமும் பொழுதும் சரியில்லை என்று புலம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் உள்ளே ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்திருந்த குணசேகரன் புலம்பவில்லை! அவன் அமைதியாகக் காணப்பட்டான். காரணம் "விதைத்தவனுக்குத் தெரியும்" அன்று அவன் செய்த கலவரங்களின் பயனே இன்று தனக்குக் காயம் ஏற்பட்டது என்பதை அவன் நன்கு உணர்ந்திருந்தான்; தவறுக்கு வருந்தினான். விதைத்தவனுக்கு வருந்தினான். விதைத்தவனுக்கு தெரியாமல் மரம் முளைப்பதில்லை!

Scanned by TapScanner

மகாத்மாவின் சிந்தனைகள் - I

ரெ. கணேசன் II பி.காம்.,

1. மனிதனுக்கு உண்மையான உணர்கல்லாக இருப்பவை அவனுக்கு நேரும் கஷ்டங்களே. அவைகளுக்கு அழுதுகொண்டிருப்பதனால் அவற்றின் தீமைகளை யாரும் போக்கிவிட முடியாது.

2. நமது எண்ணங்கள், நாம் யாரை நினைக்கிறோமோ அவர்களின் செயல்களிலும் பிரதிபலிக்கின்றன.

3 நாம் மனமுவந்து துன்பத்திற்கு உள்ளாகும்போது, அதற்குப் பிரதியாக வெகுமதி எதையும் எதிர்பார்ப்பதில்லை.

4. இதய ஒற்றுமையை நாம் அடைய வேண்டுமாயின், நாம் ஒவ்வொருவரும் போதிய அளவு தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும்.

5 தாதிருஷ்டவசமாக வகுப்புவாத உணர்ச்சி மேலோங்கி இருப்பது இன்றும் உண்மைதான். பரஸ்பர அவநம்பிக்கை இன்னும் இருக்கிறது. தேர்தல்களில் தகுதியைக் கவனியாது மதத்தைப்பற்றி இன்றும் நினைக்கின்றனர் என்பது உண்மைதான்.

6. பதவிக்கும், அதிகாரத்திற்கும் நாம் போட்டி போடுவதை நிறுத்தும்வரை ஒன்று சேரவேண்டும் என்ற எண்ணம் உண்டாகாது, உண்டாக முடியாது.

7. இதுவரை நாம் இக்கற்றவர்கள் என்கிற நம் மனதிற்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது தைரியம் உடம்பிற்குரிய குணமன்று ஆன்மாவிற்குரிய குணம். வலிவுள்ள உடலில் கோழைகளையும், பலமற்ற உடலில் காண்பதற்கரிய தீரர்களையும் நான் கண்டுள்ளேன்

8. ஆபத்திலிருந்து கோழைத்தனமாகத் தப்பமுயலுதல் இழிவாகும். அப்படி முயலுகிறவன் தப்பினாலும் மனத்தால் வன்முறையே செய்கிறான்.

9. சமூகப்பற்றைவிட நாட்டுப்பற்று மிகப்பெரிது இந்த முறையிலே முதலில் நாம் இந்தியர்கள்; பிறகுதான் இந்துக்கள், முஸ்லீம்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள் என்ற பிரிவினர் ஆவோம்.

10. ஒற்றுமை பலமற்றவர்களுக்கிடையே உண்டானதாக இருக்கக்கூடாது. தம் பலத்தைத் தாமே அறிந்தவர்களுக்கிடையே உண்டானதாயிருக்கவேண்டும்.

Scanned by TapScanner

WITH BEST COMPLIMENTS FROM :

★

SRI BHARATHI COTTON MILLS,

POST BOX NO : 6,

RAJAPALAYAM.

Scanned by TapScanner

11. மிருகத்தன்மை வாய்ந்து, பலமற்றவர்களைப் பலவான்கள் நசுக்கினால் தன்னை யறிதல் இயலாததாகிவிடும். பிறகு இன்னும் பலமுள்ளவர்களால் இவர்கள் அடக்கப்படும்படி நேரும்.

12 போராட்டத்தில் நாம் மேலும் முன்னேறுவதற்கு முன்னே நமது இதயங்கள் சுத்தமடைய வேண்டியது அவசியம்.

13 நமக்கு பலம் இருக்கிறது என்பதில் நமது மனதிற்குத் திருப்தி ஏற்பட வேண்டுமே யன்றி, மற்றவர்களிடம் நாம் அதை விளம்பரப்படுத்திக்கொள்ள இன்னும் ஆசைப்படுகிறோம். இதுதான் நமது பலவீனமாகும்.

14. கோழைகள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் துஷ்டர்களும் இருப் பார்கள்.

15 செல்வாக்கு உள்ளவர்களைக் குற்றங்களிலிருந்து தப்புவிக்கும் பழக்கத்தை நாம் உறுதியாக நீக்கிவிட வேண்டும்.

With Best Compliments From :

SREE KARPAGAMBAL MILLS LIMITED

Registered Office

&

Factory

CHOLAPURAM SOUTH P. O.,

RAJAPALAYAM,

Ramanathapuram District.

Licenced and Installed Capacity :

30,080 Spindles.

Manufactured of Quality Yarn from

30s to 80s

Scanned by TapScanner



With best compliments from :

M. R. S. Radhakrishna Raja

Managing Partner.



Phone : { Office : 2919 / Factory : 2929 }

Telegrams : RADHA

UNIVERSAL TRADING AND AGENCIES CO.,

COTTON & COTTON WASTE MERCHANTS,

RAJAPALAYAM-626 117



Scanned by TapScanner

7th College / Sports Day - 22-3-1980



Secretary Welcomes



Presidential Address



Principal Presents
Annual Report



Physical
Director's Report

Scanned by TapScanner



Address by
Chief Guest



Distribution of
Degree




Distribution of
Prizes




Memento to
Chief Guest

Scanned by TapScanner

N. S. S. Volunteers at Work









Scanned by TapScanner

S. S. L. VOLUNTEERS AT WORK



A Clarion Call



A Spade in hand

S. S. L. FREE MEDICAL CAMP




Secretary inaugurates




Diagnosis

Scanned by TapScanner

COLLEGE ANNUAL SPORTS










Scanned by TapScanner

Mupperum Sevai Thitta Vizha 21-12-79




G. M. Janakiram Mills inaugurates
N. A. E. P. activities.



Municipal Commissioner inaugurates
N. S. S. activities.



Municipal Engineer inaugurates
S. S. L. activities.



Local Leader's pledge of
support.

Scanned by TapScanner

பாரதி என் தலைவன்

எம். செல்வராஜ் II பி.காம்.,

(1) பூதலத்துப் பெருங்கவிஞன் ஒருவனை
புரட்சிமிகு பாரதியெம் தலைவனென்றே
மேதைகளும் ஞானியரும் மேலோர்தாமும்
மிகவிழைந்தே ஏற்றிடுவர் வியப்பொன்றில்லை
ஓதுகின்ற பெருந்தலைவர்க் குற்றப்பண்போ
ஒன்றல்ல பலவாக இவரில் காண்போம்
மாதவத்தால் பாரதத்தில் உதித்தவீர
மணிக்கவிஞன் பாரதியென் தலைவன்றானே.

(2) பாரதத்தில் மக்களெலாம் அடிமைவாழ்வில்
பஞ்சைகளாய் வாழ்ந்திட்ட நிலையையெண்ணி
வீரமுடன் கவியினைசந்து வீறுகொண்டு
விடுதலையில் வேட்கைகொளச் செய்த நீரன்
நேரமெலாம் நாட்டிடத்துப் பற்றுவைத்து
நித்தமும்நற் கவிதைகளைப் பொழிந்த அண்ணல்
நேர்மையுள வென்தலைவன் என்றுகூற
நெஞ்சமெல்லாம் வீரத்தின் துடிப்புபொங்கும்.

(3) மூக்காலம் உணர்ந்தறிந்த மேதையாவான்
மூதறிஞர் போற்றுகின்ற மேன்மைச்(செம்மல்)
எக்காலும் உழைப்பொன்றே யோகமென்றோன்
ஏழையரில் எளியவரில் இரக்கங்கொண்டோர்
தக்க நலம்புரிந்திடுதல் யாகமென்றோன்
தாய்நாட்டின் திருத்தொண்டைத் தலைமேற்கொண்டோன்
மக்கள்தமக் கமைதியொன்றே ஞானமென்றோன்
மாதவர்கள் கூறுவதும் அஃதேயன்றே.

Scanned by TapScanner

சுவாமி விவேகானந்தர் காண விரும்பிய பாரதம்

பா. வெங்கட்டரமணன்,
வணிகவியல் இரண்டாமாண்டு,
இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி,
இராஜபாளையம்-626117 இந்தியா.

[பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் குரு பூஜை விழாவையொட்டி,
தமிழகத்தின் அனைத்து கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப்
போட்டியில் முதற் பரிசு பெற்ற கட்டுரை]

முன்னுரை :

இந்தியாவில் எத்தனையோ சமயப் பெரியார்கள் தோன்றினர். இவர்களில் சிலர் ஒளிமிக்கவராகவும், புதிய சகாப் தத்திற்கு வழி வகுப்பவராகவும் இருந் தனர். ஆனால் எல்லோரையும் விட மனிதகுலம் உயர்வதற்கு அருளியவரும்; நாட்டுப் பற்றை மக்களிடையே தூண்டி தாயகத்தை (பாரதத்தை) உலகமெலும் அரியணையின் உச்சியில் அமர்த்திய வரும் ஒருவரே. ஆம் ; நிச்சயம் அவர் தருமத்தின் விளக்கு, நவயுக சீர்திருத்த உணர்வின் சின்னம், பாரதத்தின் சிற்பி, தீர்க்கதரிசி சுவாமி விவேகானந்தர் தான். இவர் காண விரும்பிய பாரதம் சரித்திரத்தின் பொன் எழுத்துக்களால்— பொறிக்கப் பட வேண்டிய அணையா விளக்காகும். அப்படிப் பட்ட பாரதத் தைப் பற்றி இக் கட்டுரையில் காண் போம்.

வறுமையை ஒழித்த பாரதம் :

என் நாட்டில் ஒரு நாய் பட்டினி கிடந்தாலும் அதன் பசி தீர்க்கப் பாடுபடு வேன் என்று வீர முழக்கம் செய்தவர் நம் விவேகானந்தர். பஞ்சம், பிணி இவை தவிர்க்கப் பட வேண்டும். வறுமையை ஒழித்து, நோய்நொடிகளைத் தீர்த்து, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களில் துயருற்றோருக்கு தொண்டு செய்யும் எந்த நிறுவனம் அமைக்கப் பட்ட பாரதத்தை சுவாமிகள் விரும்பினரோ அந்த நிறுவனம் தான் ஸ்ரீ ராம கிருஷ்ண சேவா சங்கம். ஆம்; அவர் நிறுவியதே இச் சங்கம். ஏழை சிறிது மகிழ்ச்சி பெறட்டும், இன்பம் நுகரட்டும். பின்னர் தானே துறவு மனம் வரும். என்றார் சுவாமிஜி. வறுமையையும், துன்பத்தையும் அழிக்க துறவு மேற் கொள்ள வேண்டும்.

சேவை செய்யும் பாரதம் :

பிறரை வாழ்விப்பதற்கு தனது மோட்சத்தையும் தியாகம் செய்யும் மக்கள் நிறைந்ததாக இந்தியா திகழ வேண்டும் என்றார் சுவாமிஜி. புகழ், பதவி, பணம் இவற்றுக்காக உழைக்கா மல், மக்களுக்கு சேவை, மனப்பான்மை யோடு உழைக்கக் கூடிய இளைஞர்கள் தோன்ற வேண்டும். சேவையில் மரணத்தைத் தழுவத் தயங்காதவர்கள் நிறைய வேண்டும். அதற்கு சுய நலத் தை சாம்பலாக்கி விட வேண்டும். தன் மாலான உதவியை பிறருக்குச் செய்ய வேண்டும்.

Scanned by TapScanner

அறமே பாரதம் :

அறம் செய்வதற்கு ஒவ்வொருவரும் விரும்ப வேண்டும். நம்மிடம் உள்ள வற்றைப் பிறருக்குக் கொடுத்து பகிர்ந்து உண்ணலாம். அதன் மூலம் அறமும் ஒற்றுமையுமுள்ள பாரதம் நிச்சயம் உருவாகும்.

அச்சம் வென்ற பாரதம் :

எதைக் கண்டும் ஆச்சரியம் அடை யாத மக்கள் நிரம்பியதாக இந்நாடு நிகழ வேண்டும். பாரதி பாடிய அச்சமில்லை ..... துச்சமாக எண்ணி நம்மை தூறு செய்த போதிலும் என்ற பாடலின் படி நாம் அச்சத்தை தவிர்க்க வேண்டும். அஞ்சா நெஞ்சம் கொண் டவர்கள் நிறைந்த பாரதத்தையே சுவாமிகள் காண விரும்பினர்.

சத்தியமே இந்தியா :

சத்தியமே ஜெயம். சத்தியம் வெற்றி. எனவே, சத்தியம் தவறுதபடி நடக்கக் கூடியவர்களாக இந்தியர்கள் விளங்க வேண்டும். சத்தியத்திற்குக் கட்டுப் பட்டவர்கள் வாழக் கூடிய புண்ணிய பூமியாக பாரதம் இருப்பதையே சுவாமிஜி விரும்பினர்.

பகுத்தறியும் பாரதம் :

உண்மையை அனுபவ பூர்வமாக நிர்ணயித்து, மூடநம்பிக்கையையும் ஆராயக் கூடிய மக்கள் நிரம்பியிருக்க வேண்டும். பகுத்தறிவுக்கு மேம்பட்டது அறிவு என்கிறார் சுவாமிகள் எனவே, அனுபவத்தினால் தான் எதையும் ஆராய்ந்து அறிய முடியும். இந்தியா வில் மக்களின் அறியாமையைப்போக்கிட வேண்டும். ஐரோப்பிய நாகரீகத்தை அகற்றிய பாரதம் அமைய வேண்டும். நம் பரம்பரைப் பண்பில் பற்று கொண்ட இந்தியராக நாம் திகழ வேண்டும்.

சிந்தனை உருவான பாரதம் :

எதையும் சிந்தித்துப் பார்க்கக் கூடிய மக்களாக இந்தியர் உருவாக வேண்டும். இதையே சுவாமிகள் அறிவுக்குப் பொருந்தாதது எதையும் ஏற்காதீர்கள், என்று கூறினர். அறியா மையைப் போக்கி மாயையை எதிர் நோக்கிப் போராடும் சக்தியை உடைய வர்களாகவும் இந்தியர் திகழ வேண்டும்.

தன்னம்பிக்கையினர் வாழும் பாரதம்:

தன் தவறை ஒத்துக் கொள்ளக் கூடிய தன்னம்பிக்கை நிறைந்தமக்கள் வாழும் பூமியாக இந்தியா திகழவேண்டும் உணர்வதற்கு ஓர் இதயம், எண்ணு வதற்கு ஓர் அறிவு, உழைப்பதற்கு உறுதியான உடல்—இது தான் நமக்கு தேவை என்றார் சுவாமிகள். எனவே நாம் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும்.

அன்பான பாரதம் :

ஆழ்ந்த அன்பிலிருந்து ஞானம் தோன்றும். அறியாமையும் மறையும். எனவே, அன்பு எல்லோரிடமும் அமைய வேண்டும். எல்லா உயிரையும் நம் உயிர் போல் நினைக்க வேண்டும். ''நான் பிறரை நேசிப்பதன் மூலம் என்னையே நேசிக்கின்றேன்'' என்ற சுவாமிகளின் கருத்துப்படி பிறரை நேசிக்க வேண்டும்.

பலமுள்ள பாரதம் :

வேதாந்தியின் ஞான பலமும், முஸ்லீம்களின் தேகபலமும் ஒன்று

Scanned by TapScanner

சேர்ந்த மக்களைக் கொண்ட நவபாரதத்தைக் காணத் துடித்தவர் சுவாமிகள். இதற்கு என்ன செய்ய வேண்டும் ?

இளைஞர்கள் பலசாலிகள் ஆக வேண்டும். சாதி, மதபேதமற்ற இந்தியா அமைக்கப் பட வேண்டும். அதாவது, சாதி, மத சச்சரவுகள் இல்லாத இந்தியா அமைத்தல் வேண்டும். எல்லா விதமான மூட நம்பிக்கைகளையும் அகற்ற வேண்டும், ஒற்றுமையாக இந்தியர் வாழ வேண்டும். ''ஒற்றுமையான அந்த பலமே நமக்குத் தேவை' என்றார் சுவாமிஜி. சிறு குழந்தைகளுக்கும் தைரியம் ஊட்டி வளர்க்க வேண்டும். சகிப்புத் தன்மையை நாம் கைக்கொள்ள வேண்டும்.

பொறுமையை அகற்ற வேண்டும். ''எல்லோரும் கீழ் படியத் தெரிந்து கொண்டால் அதிகாரம் தானே வரும்'' என்றார் சுவாமிகள் எனவே கீழ்படியத் தெரிந்து கொண்டு செயல்பட வேண்டும். பாரதத்திற்காக நாம் ஒவ்வொருவரும் உழைக்கத் தொடங்கினால் பாரதம் உயரும் ; பலம் பெறும், சாவையும் எதிர்க்கக் கூடிய மனோதிடம், தன்னம்பிக்கை, கடவுளிடம் நம்பிக்கை, இவற்றைக் கைக் கொண்டால் பலம் தானாக வரும். அப்படிப் பட்ட பலமுள்ள பாரதத்தை உருவாக்க வேண்டும்.

ஆன்மீக இந்தியா :

சோஷலிஸம் அல்லது வேறு அரசியல் கொள்கைகள் இந்தியாவை கவரும் முன் ஆன்மீகக் கொள்கைகளைப் பரப்ப வேண்டும். நமது சாஸ்திரங்களில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை மக்கள் பேசும் மொழிகளில் போதிக்க வேண்டும். இதனால் கௌரவமும், பண்பாடும் வளரும். மக்கள் அதைச் சிந்திக்கும்படிச் செய்ய வேண்டும். மனப் பண்பு பெற்ற இந்தியர்கள் நிறைந்த நாட்டையே நம் சுவாமிஜி காணவிரும்பினர்.

மதமும், பாரதமும் :

இந்தியர்க்கு மத உணர்வு ஊட்ட விரும்பினர் சுவாமிகள். இந்தியா உயிர் வாழ வேண்டுமானால் சமய உணர்வையே தேசீய வாழ்வின் முதுகெலும்பாகச் செய்ய வேண்டும். பல விதமான அபிப்ராய பேதங்களையுடைய மதப் பிரிவுகள் ஒற்றுமையாக வாழக் கூடிய அற்புதமான காட்சியை இந்தியாவில் தான் காண முடியும் என்றார் சுவாமிஜி. எனவே, அவ்வாறு ஒற்றுமையாக வாழ மத வெறி தகர்க்கப்பட வேண்டும். சன்மார்க்கமே எல்லாமதத்துக்கும் அடிப்படை. எனவே, அதை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

பாரதத்தின் கல்வி :

மனிதனை மனிதனுக்குகிற கல்வியாக கல்விமுறை அமைக்கப் பட வேண்டும். இதையே சுவாமிகள், ''நமக்கு வாழ்வை எழுப்பித் தருகிற, மனிதனை மனிதனுக்குகிற நன்னடத்தையைத் தோற்றுவிக்கிற கருத்துக்களை அளிக்கும் கல்வியே வேண்டும் என்றார். எனவே, நம் கல்விமுறை ஒழுக்கம் தரக் கூடியதாக, மனிதத் தன்மையை வளர்ப்பதாக இருக்க வேண்டும். இக் கல்வி நம்மைக் கல்விமான்கள் ஆக்கும்.

தேச பக்தர் நிறைந்த பாரதம் :

அன்பையும், இதயபூர்வ உணர்ச்சியையும் மேற்கொண்டால் தேசபக்தி தானாக வரும் அப்படிப்பட்ட தேசபக்தர்கள் நிறைவதையே காண விரும்பினர் சுவாமிஜி

முடிவுரை :

இக் கட்டுரையில் கண்டபடி, சுவாமி விவேகானந்தர் காண விரும்பிய பாரதத்தை நாம் அமைக்க வேண்டும். அவ்வாறு அமைக்க சுவாமிஜி கூறியபடி, எழுந்திருங்கள் ! விழித்துக் கொள்ளுங்கள் ; இனிமேல் உறக்கம் கொள்ளாதீர்!'' வாழ்க! விவேகானந்தர் திருநாமம் !

வளர்க ! அவர் காண விரும்பிய பாரதம் !

''மனிதனின் இன்பம் புத்தியில் உள்ளது''

—குருநாதர் சுவாமி விவேகானந்தர்.

Scanned by TapScanner



National Adult Education Programme



Social Service League

Scanned by TapScanner

Editorial Board; "MUHIL"

Games Committee.

Scanned by TapScanner

'முகில்' — ஒரு அறிமுகம்

இங்கு நீங்கள் காணப்போவது கல்லூரி சமூக சேவை சங்கம் நடத்தும் கையெழுத்து வார இதழின் சில பகுதிகள். வாரம் ஒரு முறை மாணவர்கள், ஆசிரியர்கள், கல்லூரி அலுவலக ஊழியர்கள் ஆகியோரது படைப்புக்களை, சமூக சேவை சங்க மாணவர்கள் வரை பேருக் கொண்டு எழுதி சுவர்ச் செய்தித் தாள்களைப் போல் அதற் கான அறிவுப் பலகையில் ஒட்டிப் பலரும் படித்து மகிழும் வண்ணம் நடத்தி வருகிறார்கள். இந்த 'முகில்' என்னும் கையெழுத்து வார இதழ் எங்கள் கல்லூரி குடும்பத்தின் மழலை. அது தவழ்ந்து சிரித்து எங்களை மகிழ்விக்கிறது. அந்த முகில் உதிர்த்த சில துளிகளைத் தொகுத்து தந்துள்ளோம்.



EDITORIAL BOARD

Patron : Prof G. Venkatesan. M. A., M.D. P.A.

Chief Editor : Mr. P. Gomathinayagam M. A (Pol) M. A (His) Assistant Professor of History

Editors : Mr. R. Damodharan M. A., Assistant Professor of Economics

Mr. D. R. Subramaniyan M. A. Assistant Professor of English.

Student Editors
1. A. Velayatham III B. A.
2. M. S. Mohamad siddik III B. A.
3. M. Divan mohideen III B. A.
4. P. Muthiah III B. A.
5. A. Chandrasekaran III B. A.
6. M. Rackland Muthuram III B. A.
7. Murugesan III B. A.
8. R. Mathi Vanan Devadose III B. Com.
9. M. Muruga Boopathi III B. Com.

Scanned by TapScanner

மு கி ல்

மழை : (கையெழுத்து வார இதழ்) துளி :

ஆசிரியர் : மீ. கோமதிநாயகம்

அறிவு அன்பு ஒழுக்கம் உயர்வு

17-10-79 இதழின் தலையங்கம்

முகிலின் இரண்டாவது துளி இது.

தலைக்கு மேலே மழை மேகங்கள், தலைக்குள்ளோ வரும் பல்கலைக் கழகத் தேர்வு பற்றிய எண்ணங்கள்.

கல்லூரி வாழ்க்கை என்பது வாழ்க்கைக் கல்லூரியில் வெற்றி பெறுவதற்கான பயிற்சி கூடமாகும். தேர்வில் வெற்றி பெறுவது வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான ஒத்திகையாகும் !

வெற்றியின் இரகசியம் மனதை ஒரு முகப்படுத்துவதில் தான் உள்ளது அது எண்ணத்தின் ஆற்றலை ஆயிரம் மடங்கு அதிகரிக்கும். அதுவே அறிவிக் கருவூலத்தின் திறவுகோல். உழைப்பே வாழ்க்கையில் உயர்வதற்கான உத்திரவாதம் சிந்தனையைச் சிதர விடாமல் உழையுங்கள். உயர்ந்த குறிக்கோளுக்காக உழையுங்கள் உங்களுக்காக, உங்கள் குடும்பத்திற்காக, உங்களை தாங்கிக் கொண்டிருக்கும் சமுதாயத்திற்காக உழையுங்கள்! அயராமல் தளராமல் உழையுங்கள். உழையுங்கள். உழைப்பு உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக்கும்,

உழைப்பின் குறிக்கோள் சேவை. சுய சேவை பெரிது. பொது சேவை அதனினும் பெரிது. சிறந்தது, பிறருக்காக உழைப்பதே யாகம். பிற அனைத்தும் போகமே ! சேவையே வாழ்வின் சுவை.

வெ = மு + கி + ல்
வெ = வெற்றி
மு = படிப்பு
கி = உழைப்பு
ல் = சேவை

எனவே, படியுங்கள், உழையுங்கள், சேவை செய்து வாழ்வாங்கு வாழுங்கள்,

பேராசிரியர். க. வெங்கடேசன்.

Puzzle முகில் 30-1-80

"The cheese that the rat, that the cat that the boy ate, caught and killed was rotten"

1. How was the cheese ?
2. Who did what

D. R. Subramanian. M. A.
Assistant Professor of English.

Scanned by TapScanner

குருவல்

முகில் 19-12-79

1. கலப்பு மணத்தம்பதியருக்குப் பதக்கமும் பாராட்டும் அளித்து கௌரவிக்கும் காலமிது. இத் திட்டத்தால் கவரப்பட்டோ என்னவோ ஒரு சிங்களமும் புலியும் கலப்பு மணம் செய்து கொண்டு ஒரு குழந்தையையும் பெற்றுக் கொண்டுள்ளனர். மனைவிழா நடந்த இடம் — கல்கத்தா மிருகக்காட்சி சாலை.

2. லூசியாளைவில் ஒரு அதிசயம். ஒரு தலை, இருகடல்கள், எட்டுக் கால்களுடன் ஒரு எருமை கன்று பிறந்தது. டாக்டர் கோளி அறுவை சிகிட்சை மூலம் அவற்றைப் பிரித்தார். கன்றுகள் நலம்.

குருவியார் R. Damodharan, M.A.,
Assistant Professor of Economics.

யாழ்கைத் தலைக்கு வேகம் !

முகில் 5-12-79

[illegible]

கலைவன் : T. இராமநாதன் M.A.,
கல்லூரி மாணவன்.

சில செய்திக் குறிகள்

பன்னாட்டுச் செய்திகள் :

நாள் 17. ஐ. நா. சபையின் முக்கிய அங்கம் பாதுகாப்புச் சபை (Security Council) இதில் தற்காலிக உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தி, மூன்றிலொரு நாடுகளுக்கு அதில் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என இந்தியா கோரியது.

நாள் 10 1979ஆம் ஆண்டுக்கான [illegible] நோபல் பரிசைத் தென்னிலங்கைக் [illegible] அன்னை தெரசா பெற்றார். 192,000 டாலர்கள் பெறுமான இப் பரிசை [illegible] பரிசுக் கமிட்டியில் தலைவர் [illegible] சார்பாயிட் இருந்து [illegible] நார்த்தி நிகழ்ச்சி [illegible] பெற்றார். நோபல் பரிசை பெறும் [illegible] பெண்ணை அன்னை தெரசா !

நாள் 08 [illegible]

Scanned by TapScanner

இன்னூட்டுச் செய்திகள் :

டிச : 2 அடுத்த கல்வி ஆண்டு முதல் திருத்தி அமைக்கப் பட்ட வடிவமுடைய பட்டப்படிப்பு(Restructuerd degree course) வருவதாக இருந்தது. ஆனல் மதுரை-காமராசர் பல்கலைக் கழக ஆட்சி மன்றம் (Syndicate) அத்தகைய மாற்றம் தற்போது தேவையில்லை என முடிவு செய்துள்ளது.

சன: 29 இந்தியா பாகிஸ்தானுக்குகிடையே நடை பெற்ற கிரிக்கெட் பந்தயங்களில், இரண்டில் இந்தியா வெற்றி பெற்று விட்டதால், இந்தப் பந்தயக் கோர்வையில் இந்தியா வென்றது. சென்னைப் பந்தயம் முடிந்ததும் சுனில் கவாஸ்கர் காப்டன் பொறுப்பிலிருந்து விலகப் போவதாக அறிவித் துள்ளார். கடைசிப் பந்தயமான கல்கத்தாப் பந்தயத்திற்கு விசுவநாதன் காப்டனாகநியமிக்கப் பட்டுள்ளார்.

நம்வீட்டுச் செய்திகள் :

டிச : 5 நம் கல்லூரி மாணவர் பேரவைத் துவக்க விழா இனிதே நடைபெற்றது. ஆட்சிக் குழுத் தலைவர் உயர்திரு N.A. இராமச்சந்திர ராஜா தலைமையில் தொழிலதிபர் உயர்திரு P.R. இராமசுப்பிரமணிய ராஜா பேரவையைத் துவக்கி வைத்தார். பேர வைத் தலைவர் A. இராம கிருஷ்ணன் வரவேற் புரையாற்றினர். பேராசிரியர் திரு. P. இராமச் சந்திரன் M. A. மாணவ பொறுப்பாளர்களை அறி முகப்படுத்தினர். மாணவர் பேரவைச்செயலாளர் A. மதிவாணன் நன்றி சொல்ல விழா இனிதே நிறைவுற்றது. உயர்திரு P.R.இராமசுப்பிரமணிய ராஜா கல்லூரி விடுதிக்காக ரூபாய் ஒரு இலட்சம் நிதி அளித்துள்ள மகிழ்ச்சி செய்தியும் ஆட்சிக் குழுவின் முன்னாட் செயலாளர் உயர் திரு M. D. S. சந்திர சேகர ராஜா, தமது பெற்றோர் பெயரில் ரூபாய் இரண்டாயிரம் மதிப்புள்ள அறக் கட்டளை வழங்கியுள்ள செய்தியும் அறிவிக்கப் பட்டன.

சன : 26 நம் கல்லூரியில் குடியரசு தின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வந்து கொடியேற்றி மாணவர் கட்கு அறிவுரை வழங்கியவர் முன்னாள் நகரவைத் தலைவர் திரு A. A. சுப்பா ராஜா. விழாவிற்கு வந்திருந்தோரைக் கல்லூரிமுதல்வர் வரவேற்றார் கல்லூரிச் செயலாளர் திரு N. R. K. சுப்புராம் ராஜா சிறப்புரையாற்றினர். மாணவர் மன்றத் தலைவர் இராம கிருஷ்ணன் நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது.

Aesop's Fable

முகில் 12-12-79

An old crap said to her young one, "Why do you walk so rooked, child' walk straight" The young crab said, "Mother please show me the way. When I see you walking straight I shall follow your examble".

Scanned by TapScanner

The Example is always better than the advice.

முகில் இதழுக்காகச் சிலர் ஓவியங்கள் வரைந்தார்கள், அவர்களது ஓவியங்களை இங்கே தர இயலவில்லை. அவர்களின் பெயர்களைத் தருகிறோம்.

1. A. வேலாயுதம். III B. A.
2. P. முத்தையா. III B. A.
3. சு. ரா. கணேசன் II B. Com.

முகில் மாணவர்கட்கு விடுத்த வேண்டுகோளில் சில !

To eradicate illiteracy each one teach one
Plan your study and career
Work hard and get more marks
Keep our campus clean

Keep this in memory — முகில் : 31-10-79

I keep six honest serving men
They taught me all I knew
Their names are what and why
and when and how and where and who

— Kipling

There are four sorts of men
He who knows not and knows not he knows not
he is a fool—Shun him ;
He who knows not and knows he knows not
he is simple—Teach him ,
He who knows and knows not he knows
he is asleep—wake him ;
He who knows and knows he knows
he is wise—follow him.

—முகில் 19-11-79.

சில புதுக் கவிதைகள்

நிற நீதி :

நிற வெறியைக்
கடிகின்றோம்
நித்தம்
மேடை போட்டுப்
பேசுகின்றோம்
நம் நாட்டில்
மணப்பெண்ணை
மணமகனைத்
தேடுகையில்
கறுப்பை
ஒதுக்குகின்றோம்
இது என்ன நீதியோ ?

—பி. கோமதி நாயகம்.

மெட்ராஸ் ஐ :

பார்க்க வேண்டும்
பார்க்க வேண்டும்
என நினைத்தேன்
மெட்ராஸை
ஆனால் எனக்கு
வந்ததோ
மெட்ராஸ் 'eye'

—M. R முருகபூபதி
III B. Com.

Scanned by TapScanner

லாட்டரி

லாட்டரி விழவில்லை
விழவில்லை என
ஏங்கினேன் பல நாளாய்
கடைசியில் விழுந்து
விட்டது
எங்கோ கீழே !

—R. மதிவாணன் தேவதாஸ்
III B. Com.

மனச்சாட்சிகள்

ஆண்டவன் படைத்து வைத்த
மனக்குடையின் கீழ் நிற்கும்
டிராபிக் போலீஸ்காரர்கள்
இவர்களும் வாங்குவதுண்டு
'இலஞ்சம்'

—M.இராக்லண்ட் மதுரம்
III. B. A.

முகில்

முகில் கண்டேன் அதன் துளி உண்டேன்
புதுக் கவிதை மணம் கண்டேன்
பன்னூட்டுச் செய்தி பல கண்டேன்
தூசி படிந்த மூளை துலங்கக் கண்டேன்
அடுத்த முகில் காண ஆவலாய் நிற்கிறேன்.

— சா. நயினா முகமது III B. Com.

சிரிக்காவிட்டால் விடமாட்டோம் !

பாபு : டேய் கோபு, இனிக்கும் இளமை பார்க்கப் போகலாமா?

கோபு : போடா, டாக்டர் இனிப்புச் சர்க்கரை கூடாது என்று சொல்லியிருக்கிறார் !

—M. R. முருகபூபதி III. B. Com.

மகன் : அப்பா ! மெட்ராசுக்குப் போய் என்ன வாங்கி வந்தீர்கள் ?

தந்தை: Madras eye !

மகன் : எனக்கு அது வேண்டாம் !
Madurai eye தான் வேண்டும்

R. சீனிராஜ் I B.A.

Mohan : What is post-mortem ?
Sundar: Sending a dead body by post is post-mortem.

—P. Gomathinayagam.

சிந்தனைக்கு

1. மனிதர்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லையே என்று நான் கவலைப்படுவதில்லை, என் கவலையெல்லாம் நான் மனிதர்களைப் பற்றிப் புரிந்து கொள்ளவில்லையே என்பதுதான்.

—கன்பூசியஸ்

2. பணிவு என்ற பண்பு இல்லாதவன் வேறு எந்த நற்குணம் இருந்தும் இல்லாதவனே.

—தி. ஜான்

Scanned by TapScanner

3. நேற்றுப் போலவே இன்றும் இன்று, போலவே நாளையும் என்றுல் நாளை எதற்கு —பாரிறை

தொகுத்தவர் : G. இராதாகிருஷ்ணன் (எம். ஏ)
கல்லூரி அலுவலக உதவியாளர்.

முகில் கேட்ட கேள்விகளில் சில

1. அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் மாஸ்கோவில் நடைபெறும். 1976-ல் எங்கே நடந்தன ?

2. இலங்கையின் அதிகாரப்பூர்வமான பெயர் என்ன ?

3. பதவிகாலம் முடியும்முன்னரே 1979ல் லோக்சபா கலைக்கப்பட்டது. அது போல் முன்னர் ஒருமுறை கலைக்கப்பட்டது. அது எந்த ஆண்டில் ?

4. தமிழில் 'பண்டாரகர்' எனும் சொல் எந்தப் பட்டத்தைக் குறிக்கும்?

5. இந்தியக் கடற்படை வீரர்களின் சீருடையின் நிறம் என்ன ?

6. What is interpol ?

7. What is the chemical name of chalk ?

8. Who is the chancellor of our university ?

9. What is the use of pyrometer ?

10. Who is the chairman of Rajya Sabha ?

சில புதிர்கள்

1. தொழில் நுட்பக் கல்லூரியில் மொழி ஆராய்ச்சி நிறுவனம் உள்ளது. சென்னையில் அது உள்ள இடத்தில் அடைக்க முடியாத ஆறு ஓடுகிறது. அது எங்கே?

2. மீனாட்சி கல்லூரி எனும் பெயரில் தமிழ்க்கல்லூரியாகத் துவங்கி இன்று அண்ணாந்து பார்க்குமளவு மகிலபோல் வளர்ந்து பல்கலை கழகமாகத் திகழ்கிறது ஒரு கல்வி நிறுவனம். அது எது ?

3. கலாநிதி என இலங்கையில் அழைப்பது எந்தப் பட்டம் பெற்றவர்களை ! ஆராய்ந்து கண்டு பிடித்தால் நீங்கள் டாக்டர் தான்.

தொகுத்தவர் : M. S. முகமது சித்திக்
III B.A.

(பல) காரங்கள் முகில் 28-11-79

பசிக்குத் தேவையான காரம் — ஆகாரம்

பார்வைக்கு உறுத்தலான காரம் — விகாரம்

Scanned by TapScanner

பதவியில் இருப்பவர் செய்யும் காரம் — அதிகாரம்
பாவம் செய்தோர் தேடும் காரம் — பரிகாரம்
அழிவைத் தரும் காரம் — அகங்காரம்
பெண்களுக்குப் பிரியமான காரம் — அலங்காரம்
சமயத்தில் செய்யும் காரம் — உபகாரம்

சமைத்தவர் M. *அண்ணாமலை*
III B.Com.

Smiling முகில் 21-11-79

Just a little smile on your lips
Cheers your heart
Keeps you in good humour
Preserves peace in your soul
Promotes your health
Beautifies your face
Induces kindly thoughts
Inspires kindly deeds

— P. Devaraj
III. B. Com.

மற்றவர்களால் முடியாததை செய்வது திறமை
திறமையால் முடியாததை செய்து காட்டுவது
மேதாவித் தனம்.

—வில் ஹென்றி

குழந்தைகள் ஆண்டு — சில புள்ளி விபரங்கள்

1 வைட்டமின் குறைவினால் இந்தியாவில் 2.5 மில்லியன் குழந்தைகள் கண்பார்வைக் குறைவால் பாதிக்கப் படுகிறார்கள்.

2. இந்தியாவில் ஒரு வருடத்திற்கு 1200 முதல் 1400 வரை குழந்தைகள் கண் பார்வையை முழுவதும் இழக்கிறார்கள்.

3. தென் ஆப்பிரிக்காவில் 50% குழந்தைகள் ஐந்து வயதிற்குள்ளாகவே இறந்து விடுகிறார்கள்.

4. உலகில் 60 மில்லியன் குழந்தைகள் போஷாக்குக் குறைவினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ரெ. கணேசன்
II. B. Com.

சிறந்த நண்பர்களைத் தேர்ந்தெடுக்கத் தாமதமாகத் செயல்படு. நண்பர்களை மாற்றுவதில் மிகத் தாமதமாகச் செயல்படு.

—பெஞ்சமின் பிராங்களின்

Scanned by TapScanner

தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டம்

இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி, இராஜபாளையம்.

இன்று நாடெங்கும் தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டம் செயல் பட்டு வருகின்றது இம் மாபெரும் திட்டத்தை செயலாற்றும் பொறுப்பை இராஜபாளையம் ராஜூக்கள் கல்லூரியும் ஏற்று மிகச் சிறப் பான முறையில் செயலாற்றி வருகின்றது. இந்த திட்டத்தை செயல் படுத்தும் பொறுப்பை 1979. டிசம்பர் மாதம் தொடக்கம் எடுத்துக் கொண்டு இன்று 10 மையங்கள் நகரின் பல பகுதிகளில் எடுத்து செயலாற்றி வருகின்றது. எடுத்துக் கொண்ட 10 மையங்களும் மிகச் சிறப்பான முறையில் நடைபெறு வதுதான் இக்கல்லூரியின் சிறப்புத் தன்மை. மொத்தம் நடைபெறும் 10 மையங்களில் 320 பேர் வரை படித்து வருகின்றனர். அத்தனை பேரும் தாழ்த்த பட்டவர்கள் என்று சொல்லப்படும் பின் தங்கியவர்கள். படிக்க வருவோர் அனை வருக்கும் சிலேடு, குச்சி, புத்தகம், எழுத்துப் பயிற்சிப் புத்தகம், பென்சில் ஆகியவை மத்திய அரசின் உதவித் தொகை மூலம் இலவசமாக தரப்படு கின்றன. படிக்க வருவோர் அனைவரும் உற்சாகத்தோடு வருகின்றனர். வாரம் 5 தினங்கள், தினமும் இரவு இரண்டு மணி நேரம் இரவுப் பள்ளி நடைபெறு கின்றன. கற்பிப்போர் அனைவரும் கல்லூரி மாணவர்கள். கற்றுத் தருவோ ரின் எண்ணிக்கை 30 பேர். இத் திட்டத்தின் அதிகாரி திரு. R. நாராயணன் (கல்லூரி ஆசிரியர்). இத்திட்டத்தின் மேற்பார்வையாளர் திரு. P. சுப்ரமணியம் (முன்னல் கல்லூரி மாணவர்). இத் திட்டம் செயல்பட அவ்வப்போது ஆக்கத் தையும், ஊக்கத்தையும் கொடுக்கும் கல்லூரி முதல்வர் திரு. G. வெங்கடேசன் அவர்கள் திட்டம் மென்மேலும் வெற்றி யடைகின்றது. நடைபெறும் அனைத்து மையங்களையும் பார்வையிட மதுரை காமராசர் பல்கலைக் கழக திட்ட அதிகாரி Mr. S. ராஜு அவர்கள் வந்து சிறப்பாக நடைபெறும் மையங்களை அனைத்தையும் மனமுவந்து பாராட்டியிருக்கின்ருர்கள். இத்திட்டம் இராஜபாளையத்தில் மாபெரும் வெற்றி யடைந்தமைக்கு காரணம் திட்டம் நடைபெறும் இடங்களில் நடத்த படும் சமூகப் பணியின் காரணமும் ஆகும் கல்லூரியின் சார்பாக சாலையிடு தல், இலவச மருத்துவ சிகிச்சை கொடுத் தல், விளக்குகள் அமைத்து கொடுத்தல், தண்ணீர் குழாய்கள் போட்டுத் தரல் ஆகியவை இக்கல்லூரி நடத்தும் பொதுத் தொண்டு. எனவே இத்திட்டம் மிகச் சிறந்த முறையில் நடைபெறுகின்றது.

1-வது மையம் :-

முதல் மையம் நகரின் அருகில் அமைந்து இருக்கும் மங்காபுரம் பகுதி யில் 6-12-79 அன்று கல்லூரி முதல்வர் திரு. G. வெங்கடேசன் தொடக்கி வைத்

Scanned by TapScanner

தார்கள். இங்கு மொத்தம் பயில்வோரின் எண்ணிக்கை 35. துவக்க விழா இப் பகுதி இளைஞர் இராமகிருஷ்ணன் தலை மையில் நடைபெற்றது. கல்லூரியாசிரி யர்கள் பலர் கலந்து கொண்டனர்.

2-வது மையம் :-

இரண்டாவது மையம் நகராட்சிப் பள்ளியில் வைத்து 12-12-79 அன்று நடைபெற்றது. இராஜபாளையம் நகராட்சி ஆணையாளர் திரு. கோபால்சாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். நகராட்சி பொறியாளர் திரு. பாலசுப்பிரமணியம் வாழ்த்துக் கூறினர். கல்லூரி முதல்வர் G. வெங்கடேசன் சிறப்புரையாற்றினர் கள் இங்கு பயில்வோர் எண்ணிக்கை 30 பேர்.

3-வது மையம் :-

19-12-79 அன்று மூன்றுவதுமையம் மகியடிப்பட்டி பகுதியில் நடைபெற்றது. சங்கார் ராஜா தலைமையில் நடை பெற்ற கூட்டத்தில் கல்லூரி முதல்வர் G. வெங்கடேசன் துவக்கி வைத்தார். இராமகிருஷ்ணவித்யாலயாபள்ளி நிர்வாகி குமாரசாமி ராஜா வாழ்த்துக் கூறினர்கள். இம் மையத்தில் 30 பேர் படிக்கின்றனர். அத்தனை பேரும் நகர் துப்பரவு தொழி லாளர்கள்.

4-வது மையம் :-

22-12-79 அன்று நான்காவதுமையம் நகரின் ஒருபகுதியான சோமையா புரத்தில் நடைபெற்றது விழாவிற்கு கல்லூரி செயலர் திரு. சுப்புராமராஜா தலைதாங்கினர். ஜானகிராம் மில்ஸ் ஜெனரல் மேனேஜரும் டைரக்டருமான திரு. N. R. சுப்பிரமணிய ராஜா இத்திட்டத்தை துவக்கிவைத்தார்கள். நகராட்சி ஆணையாளர் திரு. கோபால் சாமி, பொறியாளர் திரு. பாலசுப்பிர மணியம், கல்லூரி முதல்வர் திரு. G. வெங்கடேசன், கல்லூரி சமூகசேவை திட்ட அதிகாரி திரு. கோமதி நாயகம், தேசிய சேவைத் திட்ட அதிகாரி திரு. V. விஜயராகவன், சந்திரசேகரன் ஆகி யோர் வாழ்த்துரை வழங்கினர்கள். கல்லூரி திட்ட அதிகாரி R. நாராயணன் நன்றி கூறினர். இம் மையத்தில் 35 பேர் பயனடைகின்றனர்.

5-வது மையம் :-

21-2-79 அன்று ஐந்தாவது மையம் மங்காபுரம் கிழக்குப் பகுதியில் நடை பெற்றது. திட்ட அதிகாரி நாராயணன் வரவேற்புரை நிகழ்த்தினர். நகர் மன்ற ஆணையாளர் கோபால் சாமி துவக்கி வைத்தார். பொறியாளர் பாலசுப்பிர மணியம் வாழ்த்துக் கூறினர்கள். கல்லூரி பேராசிரியர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்கள். இம் மையத் தில் 30 பேர் படித்து பயனடைகின்றனர்.

6-வது மையம் :-

23-2-80 அன்று தோப்புப் பட்டி யில் வைத்து ஆறுவது மையம் துவக்கப் பட்டது திட்ட அதிகாரி வரவேற்று பேசினர்கள். கல்லூரி முதல்வர் G. வெங்கடேசன் துவக்கி வைத்தார்கள். கல்லூரி பேராசிரியர்கள் G. சந்திர சேகரன், சிறப்புரையாற்றினர். கல்லூரி பேராசிரியர்கள் 15க்கும் மேற்பட்டவர் கள் கலந்து கொண்டார்கள். இப்பகுதி யில் 32 பேர் பயன் அடைந்து வரு கின்றனர்.

7-வது மையம் :-

27-2-80 ல் ஏழாவது மையம், நகராட்சி துப்புரவு தொழிளாலர்கள் குடியிருக்கும் காலனியில் வைத்து நடைபெற்றது.

Scanned by TapScanner

சமூகதிட்ட அதிகாரி Mr. கோமதிநாயகம் வரவேற்புப் பேசினார்கள். கல்லூரி முதல்வர் G. வெங்கடேசன் துவக்கிவைத்தார்கள். கல்லூரி உடற்பயிற்சி இயக்குனர் திரு. சதாசிவம் வாழ்த்துக் கூறினர்கள். இப் பகுதியில் 30 பேர் படித்து பயனடைகின்றனர்.

8-வது மையம் :-

1-3-80 அன்று சோமையாபுரம் தெற்குப் பகுதியில் வைத்து எட்டாவது மையம் துவக்கப்பட்டது. சமூக திட்ட அதிகாரி Mr. கோமதிநாயகம் வரவேற்று பேசினர். நகர முன்னாள் சேர்மன் திரு. A. A. சுப்பராஜா துவக்கி வைத்தார்கள். கல்லூரி முதல்வர் திரு. வெங்கடேசன் பேராசிரியர், P. இராமச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துக் கூறினர்கள். இம் மையத்தில் 34 பேர் படித்து பயனடைகின்றனர்.

9-வது மையம் :-

3-3-80 அன்று இரவு 9வது மையம் துவக்க விழா துரைச்சாமி புரத்தில் வைத்து நடைபெற்றது. திட்ட அதிகாரி திரு. R நாராயணன் வரவேற்று பேசினர். விழாவைத் துவக்கி வைத்து டாக்டர் S. S. மாறன் பேசினர் பின் இத் திட்டத்தை வாழ்த்தி கல்லூரி முதல்வர் திரு. வெங்கடேசன் கல்லூரி பேராசிரியர்கள், திரு தாமோதரன், திரு. லட்சுமிநரசிம்மராகவன் திரு D.R. சுப்பிரமணியம் மற்றும் பலர் பேசினர்கள். இம் மையத்தில் மொத்தம் 31 பேர் பயனடைகின்றனர்.

10-வது மையம் :-

7-3-80 அன்று 10 வது மையம் ராஜபாளையம் வட பகுதியில் இருக்கும் ஆவரம்பட்டியில் வைத்து துவக்கப் பட்டது. துவக்க விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் திட்ட அதிகாரி திரு. R. நாராயணன் வரவேற்புப் பேசினர்கள், கூட்டத்திற்கு நகராட்சி ஆனையாளர் திரு. N. கோபால்சாமி தலைமை தாங்கினர். இத் திட்டத்தை துவக்கி வைத்தவர் ராஜூக்கள் கல்லூரியின் ஆட்சிக் குழு தலைவர் திரு. N.A. இராமச்சந்திர ராஜா அவர்கள். இத் திட்டத்தை வாழ்த்தி கல்லூரி ஆட்சிக் குழு செயலர் திரு. N.R.K. சுப்புராம ராஜா, நகராட்சி பொறியாளர் திரு. K. பாலசுப்பிரமணியம், கல்லூரிமுதல்வர் திரு. G. வெங்கடேசன், திரு. பட்டாபி ராம ராஜா டாக்டர். S. S. மாறன் ஆகியோர் பேசினர்கள்' இறுதியில் இத்திட்டத்தின் மேற்பார்வையாளர் P. சுப்பிரமணியம் நன்றி கூறினர். இம்மையத்தில் 30 பேர் படித்து பயனடைகின்றனர்.

தமிழகத்தில் நடைபெறும் வயது வந்தோர் கல்வித் திட்டத்தை நடத்தும் கல்லூரிகளில் சிறப்பாக நடைபெறும் கல்லூரிகளில் இதுவும் (ராஜூக்கள் கல்லூரி) ஒன்று. இதற்கு காரணம் கல்லூரி நிர்வாகத்தின் ஊக்குதல், கல்லூரி முதல்வர், திட்ட அதிகாரி, மேற்பார்வையாளர், ஊக்குநர்கள் (மாணவர்கள்) ஆகியோர் மிகவும் உற்சாகத்தோடு பணியாற்றுவதுடன், பயில்வோரின் ஆர்வம் சேர்ந்து சிறப்புத் தன்மை பெறுகின்றது.

மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்தில் இருந்து வயது வந்தோர் கல்வித் திட்ட அதிகாரி, திரு S. ராஜூ அவர்கள் 22-3-80 அன்று ராஜூக்கள் கல்லூரியின் சார்பாக நடைபெறும் மையங்களைக் கண்டு பாராட்டியுள்ளார்கள். இத்திட்டம் இங்கு மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

Scanned by TapScanner

When you think of Printing

Please remember



JAYARAM PRESS

Prop: P. A. ANNAMA RAJA

TENKASI ROAD

RAJAPALAYAM



Phone : 2426

Scanned by TapScanner

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER — SANJEEVI RAJAPALAYAM RAJUS' COLLEGE MAGAZINE

To be published in the first issue of every year after last day of February

FORM IV (See Rule 8)

1.	Place of Publication	... Rajapalayam
2.	Periodicity of its publication	... Annual
3.	Printer's Name	... P. A. Annama Raja
	Nationality	... Indian
	Address	... Jayaram Press, Tenkasi Road, Rajapalayam.
4.	Publisher's Name	... Principal G. Venkatesan M. A., M.O.P.A.
	Nationality	... Indian
	Address	... Rajapalayam Rajus' College Rajapalayam.
5.	Editor's Name	... Prof, P. Ramachandran M. A.
	Nationality	... Indian
	Address	... Professor of Tamil Rajapalayam Rajus' College Rajapalayam.
6.	Name and address of individuals who own the newspaper and partners & shareholders holding more than one per cent of the total capital	Principal Rajapalayam Rajus' College Rajapalayam.

I, G. Venkatesan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated
24th March 1980

(Sd.) G Venkatesan
Signature of the Publisher.

PRINTED BY
JAYARAM PRESS, RAJAPALAYAM.

Scanned by TapScanner

GOWRIHOUSE METAL WORKS

(Manufacturers of Woodscrews, Wirenails & Cut-tacks)

RAJAPALAIYAM

(S. India)

Telegrams : "GOWRIHOUSE" Post Box No. 13

Phone No. 2913

Strong Durable

Our

GOWRIHOUSE

SCREWS

Managing Partner :

R. SUDARSANAM

Scanned by TapScanner

WITH BEST COMPLIMENTS FROM :

THE JANAKIRAM MILLS LIMITED,

(SPINNING MILLS)

POST BOX No. 4,

RAJAPALAYAM - 626 117.

Telegram : 'SAKTHI'

Phone : 2115 PBX

2116 Three

2117 lines

INSTALLED SPINDLEAGE 25,300

Spinners of best quality of cotton yarn counts ranging from 14s to 80s in hank cone both single and doubled yarn and staple fibre yarn of 31s & 40s

Scanned by TapScanner

Phone : { 2589 Off.
2217 Resi

SARAVANA ELECTRICALS

32, MUDANGIAR ROAD,
RAJAPALAYAM - 626 117.



Dependable House of Everything in Electricals

AUTHORISED DEALERS IN :

Philips Lamps & Fittings
Crompton Lamps & Fittings
Mysore Lamps & Fittings
Ralli Table & Ceiling Fans
Orient Table & Ceiling Fans
Cool Home Table & Ceiling Fans
Khaitan Fans
Sansar Fans
Anchor Electrical Goods
Standard Switchgears & H. R. C. Fuse links
Vellin wet Grinders

DEALERS :

Lt Lk Switchgears
Bosma Switchgears
Finolex Cables
Underground Cable All Sizes
Dowells Cable End Sockets
Essen Electrical Control Accessories
Stanley Switchgears

Prop : P. R. SANJEEVI RAJA

Jayaram Press, Rajapalayam - Phone : 2426

Scanned by TapScanner